உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி- ஹூ பங்குனி- மீ [பகுதி ரு.
VOl. XXI. March–April–1923. No. 5.

பலகவித்திரட்டு.

முற்காலத்திலும், பிற்காலத்திலுஞ் சமீன்தார் செல்வர் முதலானோர் தமிழறிவிற் சிறந்தவர்களாயிருந்தமைபால், அவர்கண்மீது பல புலவர்கள் ஒவ்வோரமயத்திற் கூறியகவிகள் அநேகமுள்ளன; அவைகளிலே மறவாது ஞாபகத்தில்வருங்கவிகள் அவ்விநவரிபல்பும் விளங்க, இச்செந்தமிழில் வெளியிடப்படுகின்றன.

தேவாரஞ்சமீன்தார் கொண்டபொம்முநாயக்கர் சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயர்வீட்டுக்கு வந்தபோது கூறிய கவி.

நவநிதியங்கடலமுதநாவலர்தந்திடுசெல்வநான்முன்செய்த
தவபலன்தென்றுறைசைகுருசாமியருளால்வந்ததகைமைபோலச்
சிவசமயபரிபாலன்றேவாரங்கொண்டபொம்முதீரனிந்தப்
புவனமெலாம்புகழவென்றன்புன்குடினன்குடிலாகப்போந்ததாமே.

சேற்றூர்ச்சத்திரஞ் சுயம்பாகி, கவிராயரிடம் பாட்டுக்கேட்க விரும்பி, அதைவெளிப்படுத்தாமல் ஒருநாள் அழைத்துவந்து விருந்து செய்தபோது, கவிராயர் மகிழ்வுற்றுக்கூறியகவி.

செய்மணக்கும்வளச்சேறைச்சுந்தரதாசேந்திரன்சத்திரத்திலுள்ளன்
பைமணக்கச்செய்வேங்கடாசலமானமக்களித்தபாயசத்தி
னெய்மணக்குமொருகாதம்பான்மணக்குமுக்காதநேசித்துண்ட
கைமணக்குமறுகாதம்வாய்மணக்கும்பன்னிரண்டுகாதந்தானே.

சேற்றூர்ப் பெரியகோவிலுக்குக் கவிராயர் போயிருக்கும்போது மரம்வெட்டிவிற்குந் தாசரிராசாவும் வந்திருக்கப்பார்த்த தாணுபதிக்கரை யாளன் தாசரிராசாவுக்குத் தட்டிலமுதும் சட்சாதிகளுடன் ஆளுமனுப் பச்சொல்லிவிட்டுக் கவிராயருக்கு மடைப்பள்ளிக்குச்சீட்டனுப்ப உடனே கவிராயர் பின்வரும் வெண்பாவைக்கூறக் கரையாளன் மறந்துபோயினே னென வணங்கி வேண்டிக்கொண்டனன்.

தாசரிக்குத்தட்டமுதுஞ்சட்சாதியோடாளுந்
தேசமெய்க்கத்தந்தெனக்குச்சீட்டமுது—நேசமின்றித்
தந்தாய்வயதுகல்விசாதியொழுக்கம்பழமை
யிந்தவைந்தில்யாதைநினைத்தே.

திருவாவடுதுறையாதீனத்திற் பதினாறாவது பட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிகமூர்த்தி திருவையாற்றுப்பாடகரிருவர் வெகுநேரம் வீணைவாசிக்கக்கேட்டு உங்களிடம் பாட்டுக்கேட்க எட்டுவருடமானாலும் பிரியந்தான் என்றபோது கவிராயர் கூறியகவி.

மட்டுவருடம்பொழிகாவுயர்துறைசைச்சுப்ரமண்யவள்ளலாரி
தட்டுவருடன்பகைக்குந்திருவாயாலுமதிடஞ்சங்கீதங்கேட்க
வெட்டுவருடம்பிரியமெனச்சொலையாற்றுப்புலவீரினிமேலும்முன்
மெட்டுவருடவுந்தெரியாதிருப்பர்சங்கீதங்களினன்மிகவல்லோரே.

எட்டையபுரஞ் சமஸ்தானத்தில், மானேசராயிருந்த இராமசாமிப் பாண்டியனுங் கவிராயரும் யானைக்கொட்டாரம்பார்க்கச் சென்றபோது பாகன் யானைக்கு அரிசிக் கவளங்கொடுக்கப்பார்த்து மானேசர் இது எந்த அரிசியென்றுகேட்க அவன் கடையரிசி என்றுகூற, மானேசர் கடை யரிசியல்லவென்று சொல்லப் பாகன் பின்னு மவ்வாறேகூறக் கவிராய ருடனேகூறிய கவி.

விடையரிசிவசம்புவையேபணிராமசாமிமன்னுவியந்துநீசொல்
கடையரிசியல்லவெனுங்கருத்ததனைத்தென்றல்வந்துகமழுந்தென்வெற்
புடையவனும்யானுமலைத்தவனென்றாலெவரறிந்துரைப்பார்சொல்வாய்
நடையரிகளுலவுமலர்ப்பொழில்சூழுந்தென்னிளசைராசரேறே.

இராமநாதபுரம் பாற்கரசேதுபதிமகாராசா ஒருநவராத்திரியில் கவிராயர், "பாண்டித்துரையவர்கள்" முதலானவர்களைப் பரீக்ஷகர்களாக நியமித்து வந்தவித்வான்களைப் பரீக்ஷைசெய்யும்போது, அம் மகாராசா

"கடைக்கிணையோமற்றையர்தங்கால்" என ஈற்றடியெடுத்துக்கொடுத்து ஏனையடிகளைப் பூர்த்திபண்ணச்சொல்ல, எல்லாரு முடியாமற் பேசாதிருந்தார்கள்; கவிராயர் இனிப் பரீசைஷக்கர்த்தாக்களில் யாராவது பூர்த்தி செய்யலாமாவென்றுகேட்க, அவ்வாறு செய்யலாமென்று மகாராசா உத்தரவுகொடுத்தபின், கவிராயர் பின்வரும் வெண்பாவைக்கூற, உடனே அம்மகாராசா வியந்து எழுந்துவந்து அரியவிலையுள்ள பெரிய பொற்பீதாம்பரத்தை யெடுத்துக் கவிராயர் தோளிலேசாத்தி நெஞ்சைத்தட்டி யுபசரித்தனர்.

வேற்கரனைச்செந்தூர்விமலனையன்பாற்பரவும்
பாற்கரசேதுபதிவேந்தே—மேற்கொள்
விடைக்கொடியோற்கன்பன்மிருகண்டுபிறங்
கடைக்கிணையோமற்றையர்தங்கால்.

பிறங்கடை - புத்திரன்; மார்க்கண்டமுனிவரென்க. கால் - பிள்ளை.

இராமநாதபுரஞ் சமஸ்தானமந்திரி முத்திருளப்பபிள்ளை இராமேசுரஞ் சுவாமிசந்நிதியிற் சொக்கட்டான்சாரிமண்டபங்கட்டியதைப் பாராட்டி ஒரு கவிஞர்கூறியகவி.

பருப்பதங்களொவ்வொருதூண்பாக்கல்சிவன்வளையாதபாரமேரு
சுரிப்படங்காப்போதிகைநின்றிருப்பணியின்பெருமையென்னசொல் வேனையா
தருப்பொலியுங்கரதலத்தாய்மந்திரிமுத்திருளப்பதாய்பாலுன்னைக்
கருப்பணுமுன்றிருப்பணிக்கென்றுருப்பணிநன்மருப்பொலியுங்கமலத்தோனே

சுரிப்பு—படகு, தோணி, சோங்கு என்பவைபோல்வதொன்று.

தத்துவமாய்த்தசரதனுமறுபதினுயிரவருடந்தவமேசெய்து
புத்திரனைப்பெற்றெடுத்துக்கோசலநாட்டினைமட்டும்புரக்கச்செய்தான்
முத்திருளப்பேந்த்ரமதிமந்திரிநீயிவ்வுலகமுழுதுங்காக்க
வெந்தனைநாட்டவமிருந்தான்சவுந்தரபாண்டியனுனைப்பெற்றெடுக்கத்தானே.

இவர் மந்திரியாயிருக்குநாளிற் குளங்கள் பலவுடைப்பெடுக்க,இவர் எனிவ்வாறு குளங்களுடைப்பன எனக் கேட்டபோது, மணமுடியப் பெறாத பெண்குமரிகள் பலர் நம்நாட்டிலிருப்பதனாற் குளங்களுடைப்பனவெனப் பக்கத்துள்ளார் கூற, உடனே இவர் குறுணித்தாலிசெய்துவரச் சொல்லி அவர்க்கெல்லாம் மணமுடித்துவைத்தனர். அப்போது ஒரு கவிஞர் கூறியகவி.

அமரிக்கையாளன்முத்துராமலிங்கச்சேதுபதியவனிக்கெல்லாஞ்
சுமுகப்பிரதாபனெங்கண்முத்திருளப்பேந்த்ரமந்த்ரி துலங்குநாளிற்
சமருக்கென்றெதிர்த்தமன்னர்தரையிலில்லைமதனொருவன்றவிரமின்னார்
குமரிக்குட் கன்னியாகுமரியல்லான்மற்றிலைப்பெண்குமரிதானே.

இவர், இராமநாதபுரஞ்சமஸ்தானத்தைச் சார்ந்தவூர்களிற் கடன் பத்திரமெழுதிக் கொடுப்போர் இன்னதினத்திற் கொடாவிட்டாற் கொக்குச்சித்தன்பட்டியிற் குடியிருந்தபாவத்திற் போவேனாக என்று வழக்கமாயெழுதிவந்த கடன்பத்திரத்தைப் பார்வையிட்டு, அப்படிப்பட்டவூரெங்கேயிருக்கிறதென்று விசாரித்து ஆயிரக்கணக்குள்ள வேலையாட்களுடன் அவ்வூர்க்குச்சென்று அங்கே கிணறு, ஊருணி, வாவி, சோலை, நந்தனவனமுதலியவெல்லாஞ்செய்வித்து அதனை மிக்கவளமுள்ள நகரமாக்கிவைத்து இனிக் கொக்குச்சித்தன்பட்டியிற் குடியிராதபாவத்திற் போவேனாக என்று கடன்பத்திரமெழுதுங்களெனச் செய்தனராம்.

இவர் ஒருபுலவருக்குச் சம்மானஞ்செய்யக்கருதித் தன்னெழுத்தாளனிடத்தில், நான் நூறுரூபாகொடுக்கச்சொன்னதாகக் கசானுக்காரனுக்குச் சீட்டெழுது என்றுசொல்ல, எழுத்தாளன் நானூறுரூபாவுக்குச் சீட்டெழுதிக் கையெழுத்திடச் சொன்னபோது இவர் நூறுரூபாதான் சொன்னேனென்று திருத்தமுயலும்போது, புலவர் பின்வருஞ்செய்யுளைக் கூறக்கேட்டு ரூபா நானூறுங்கொடுக்கும்படி யெழுதிவிட்டனர்.

உறுக்குமதிவேந்தருக்குங்கள்வருக்குநீதிதப்பியொழுகினோர்க்குங்
கிறுக்குவரச்செயுந்துரையேபாவாணரோலையினுங்கிறுக்குண்டாமோ
பொறுக்குமரசுரிமைமுத்துராமலிங்கச்சேதுபதிபூமியெல்லா
நிறுக்குமதிமந்திரிமுத்திருளப்பாவருளப்பாநிருபந்தானே.

திருவாவடுதுறையாதீனத்திற் பன்னிரண்டாவது பட்டத்திலிருந்த மகாசந்நிதானமாகிய திருச்சிற்றம்பலதேசிகர்க்குப் பூசைக்கு இராமநாதபுரஞ்சமஸ்தானம் பிரதானி முத்துக்குமாரபிள்ளை ஆறுயிரரூபா செலவு செய்து, ஒருவெள்ளித்தேர் செய்வித்துக்கொடுத்தனர்; இதனைச் சேதுசமஸ்தானவித்துவானாகிய சீனிப்புலவர் அத்தேசிகருக்குக்கூறிய கலம்பகத்தில், ஒருகவியிற் கூறியிருக்கின்றனர்; அக்கவி வருமாறு.

குருவெள்ளிநேர்திருச்சிற்றம்பலவர்க்குப்பூசைசெய்ய
மருவெள்ளிநெய்யெனுமன்பினன்முத்துக்குமாரன்றந்த

வொருவெள்ளித்தேர்கயிலாசதெரிசனமொத்திருக்குங்
கருவெள்ளிநீக்குநடராசர்தந்திருக்கண்ணருளே.

கன்னிவாடிச்சமீந்தார் மலையாண்டியப்பையநாயுடு பேரையூர் அறைக்கீரையைத் தினமும் அஞ்சல்வழியாக வரவழைத்துப் புசிப்பதுண்டு; ஆதலாலதன்மீது பிரியமுற்று மூன்றுகவி கூறியிருக்கின்றனர். அவை வருமாறு:—

பலபடைப்பையுற்றதனுலன்னமிசையேறியிருப்பதனுலென்று
நிலவுமுடல்பசந்ததனுலரியரியென்றருந்தவர்கணிகழ்த்தலான்மா
நலகையிலைவாய்வாசமுறுதலினுற்சைவர்களுநாடலாலிச்
சொலவரியபேரையூரறைக்கீரைதிரிமூர்த்திசொரூபந்தானே. (௧)

பூவினிக்குந்தழையினிக்கும்வேரினிக்கும்விதையினிக்கும்புடைசூழ்கின்ற
காவினிக்குந்தன்மைபெற்றபேரையூரறைக்கீரைக்கறியையுண்ண
நாவினிக்குமன்றியதைக்கண்டகண்ணுமினிக்குமதைநாடிப்பாடும்
பாவினிக்குங்கேட்டசெவியினிக்குமனமினிக்குமெனப்பகரலாமே. (உ)

உரகமுடிச்சுமையுலகிற்பேரையூரறைக்கீரையுவந்தேயாருஞ்
சிரகரகம்பிதம்புரியநற்பூசைக்கமுதுதவச்செய்யும்போதி
லரகரவென்றுரைக்கிலதுகேட்டோடப்பரங்கிரிமேலையரின்று
மரகதகலாபமயிற்கீழொருகான்மேலொருகால்வைக்கின்றாரே. (௩)

இச்சமீந்தாரின் பெருங்கொடையைவியந்து ஒரு புலவர்கூறிய கவி.

கல்லொக்குஞ்சிந்தையுறுந்துரைகாள்கொடைகற்கவென்றால்
வல்லக்கவார்குலநாரசிங்கையன்வரத்துதித்த
செல்வக்குமாரன்மலையாண்டியப்பையசிங்கத்துக்குப்
பல்லக்குக்கொம்புசுமந்தீரென்றாற்புத்திபாலிக்குமே.

இச்சமீந்தார் வித்துவசபைபுடனிருக்கும்போதில், ஒருபுலவர் வந்தார். அப்பொழுது சமீந்தார் வந்தபுலவரை வாருங்கள் இருங்களென்றுரைத்தார்; சபையிலிருந்தவர்கள் விலகி இடங்கொடுக்கவில்லை; அதுகண்ட புலவர் எங்கேயிருக்கிறதென்றார்; உடனே அச்சமீந்தா ரெழுந்து கைநீட்டி யென் றலைமேலிருக்கத்தகுமேயென்றார். உடனே யிருந்தவர்கள் விலகிப் புலவரிருக்கும்படி இடங்கொடுத்தார்கள். இச் சங்கதியை வைத்து, அச்சமீந்தார் தேகவியோகமானகாலத்தில் அப்புலவர்கூறிய கவி.

மலைமீதுவைத்தவிளக்காம்வராககிரியருகே
சிலையேந்துசெங்கைமலையாண்டியப்பையசிங்கமெங்கோ
னிலைவாணர்தங்களைக்கண்டேயெழுந்துகைநீட்டியென்றன்
றலைமேலிருக்கத்தகுமென்றவாயுந்தழலுண்டதே.

இச்சமீந்தார் திருவாவடுதுறையாதீனத்தில், திராவிடமகாபாடிய கர்த்தராயிருந்த சிவஞானமுனிவர்மாணுக்கர் சங்கரமூர்த்திக்கவிராயர் கூறிய ஐந்திணைக்கோவைகேட்டு அவர்க்கு யானைக்கன்றும் வளநாடுங் கொடுத்த பெருந்தியாகி. இவ்விரண்டு கவியுஞ் சங்கரமூர்த்திக்கவிராயர் கூறியனவாகவு முரைப்பர்.

சிவகெங்கைச் சமீந்தார் மருதுபாண்டியத்தேவர் கொடை முதலிய வற்றை யொருகவிஞர் கூறியகவிகள்.

தேனுந்துதாமன்மருதேந்த்ரராசன்தியாகங்கண்டு
வானும்பர்தாமும்புலவரென்றூர்வடிவேற்குகனென்
போனும்புலவனென்றூன்புதன்றூனும்புலவனென்றூ
னுங்கவியென்றுசுக்கிரன்றூனுநவின்றனனே.

பரஞரியல்புணரும்பண்பன்றன்னின்பம்
பரஞரியாறியாப்பண்பன்—றிரஞ
ரணிமருதுபாண்டிறனையன்றுதைத்தோன்யாரும்
பணிமருதுபாண்டியபூபன்.

இச்சமீந்தார் சேதுசமஸ்தானவித்வான் சீனிப்புலவரைக்கொண்டு குன்றக்குடி முருகருக்கு ஐந்திணைக்கோவைசெய்வித்தார். அக்கோவை அச்சிடப்பட்டிருக்கிறது.

பழநிச்சமீந்தார் ஒருபுலியைச்சுட்டுவிட்டுத் தனது அரண்மனை வாயிலில் வந்து பலர்புகழக் களித்திருந்தார். அப்போது புலவரொருவர் கூ கூ என்று சத்தமிட்டுக்கொண்டு வந்தார். சமீந்தார் புலவரை இது என்னவென்று கேட்டபோது புலவர்கூறிய கவி.

பையாடரவப்பணியேந்துசொக்கர்பதியைவிட்டு
வையாபுரிக்குவரும்போதிலேநல்வழிமறித்து
மெய்யாத்தொடர்ந்துகலிப்புலியென்னைவெருட்டுகின்ற
தையாவிசயகிரித்துரையேயுன்னடைக்கலமே.

இக்கவியைக்கேட்டவுடனே அச்சமீந்தார் இக்கொடிய கலிப்புலியை இரட்டைக்குழல்வெடிகொண்டு சுடவேண்டுமென்று சொல்லிவிட்டு, இரண்டுபை ரூபா கொண்டுவரச்சொல்லிக் கொடுத்தாராம்.

போடிநாயக்கனூர்ச் சமீந்தாராகிய மகாவிவேகி தியாகியாயிருந்த வங்காருதிருமலைப்போடைநாயுடுதம்பி சுந்தரபாண்டியநாயுடுகாலத்தில் அங்குவந்த கல்போதுவித்துவான் பிச்சுவையர் தமக்கு மரியாதைசரியாகச் செய்யாதிருந்ததைக்கருதி,

வாடிநகரிருக்கமன்னன்றயவிருக்க
வோடியெதிர்வந்துதவுவோரிருக்கப்—போடிநகர்க்
கேன்றான்பெரியமலையேறிவந்தேனையயோ
நான்றானினிவருவேனு.

என்ற வெண்பாவைக்கூறிப் பின்பு நானிங்குவந்ததற்கு மரியாதை கிடைக்கவில்லை. என் மனையாளுக்கு மரியாதை கிடைத்துவிட்டதென்றாராம்; அது என்னவென்று கேட்டபோது, கோபகாலத்திலே என்மனையாளை நோக்கி, எதிர்நில்லாதே போடி என்று சொல்வதுண்டு; இனி அப்படி அவளைநோக்கிச் சொல்லமாட்டேன். அதனாலே அவளுக்கு மரியாதை கிடைத்ததென்றாராம்.

எழுமலைச்சமீந்தார் நல்லகாமயநாயுடு மிகுபுகழெய்தியிருந்தபோதொருபுலவர்கூறியகவி.

ஆராயும்வேதியர்க்குளாருமில்லையறிவில்லாவலையருமப்படியேயாகுஞ்
சீரானதுலுக்கருக்குட்சீதக்காதிசிறப்புடையவணிகருக்குட்செந்தில்காத்தான்
காராளர்தங்களுக்குள்வெண்ணையூரான்கருதரியமறவருக்குண்மூவராயன்
பேரானமூங்கிலணைநல்லகாமாதொட்டியர்க்குணீயொருவன்பேர்பெற்றாயே.

செந்தில்காத்தான்செட்டிஎன்பவர் இருந்தது சாத்தான்குளமென்றும், பன்னிருவருடமழையற்பமானபோது திருச்செந்திற்கோவிற்பூசைக்கு வேண்டியபொருளுதவி நடத்தின புண்ணியரென்றும் கூறுவர்.

மூவராயத்தேவர் நகரம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வடக்கேயுள்ளதென்பர். இவர் பேரிலே மூவராயவண்ணம் என்பதொன்றுண்டு. அதனைப் பள்ளிக்கூடங்களிலே முன்னம்படித்தார்கள். மூங்கிலணை—இவர் குலதெய்வத்தானம்.

இவர் காலஞ்சென்றபோது ஒரு புலவர் கூறியகவி.

பணவரவல்குற்செவ்வாய்ப்பாரதிவறுமையுற்று
டுணையினிவேறுமுண்டோசொற்பெருந்தகைசேர்மூங்கி
லணைதருநல்லகாமனமரர்நாடடைந்தபோது
கணவனையிழந்தமாதராயினேங்கவிஞரெல்லாம்.

எட்டையபுரங் கடிகைமுத்துப்புலவர் சிவகிரிச்சமீந்தார் வரகுணராமபாண்டியன்பேரிலே திக்குவிசயமென்னு மொருபிரபந்தம்பாடி யரங்கேற்றினர்; சமீன்தார் புலவர்க்குப் பல்லக்குக்கொடுப்பதாகச்சொன்னதைச் சிலர் தடுத்தார்களென்று கேள்வியுற்றுப் புலவர்,

வாக்கிரண்டுபேசாவரகுணராமேந்திரனே
வாக்கிரண்டுபேசமனம்வைத்தான்—

என்றார்; சமீந்தார் பின்னடக்கிறதையறிந்தன்றோ சொல்லவேண்டும் என்றுகூறப், புலவர் நான் பின்சொல்வதையறிந்தன்றோ சொல்லவேண்டுமென்று, வெண்பாவைப் பின்வருமாறு பூரணம்பண்ணினார்.

தாக்கு—மருவலரைக்கொல்லென்றான்வந்தடைந்தபோது
வெருவாமற்காப்போமென்றான்.

பின்பு பல்லக்குக் கொடுத்துப் பிரபந்தத்தைச் சேற்றூர்ச்சமீந்தாரிடத்திலுங் கோட்டைச்சமீந்தாரிடத்திலும் வாசித்துக்காட்டிவரச் சொன்னார். புலவர் இரண்டிடத்துக்கும் போனபோது கோட்டையிலே சமீந்தார் தலைமறைவாயிருந்துசொண்டு பட்டிக்குப்போயிருக்கிறதாகச் சொல்லிவிட்டாராம்; சேற்றூரி லுபசரித்தார்களாம்; பின்பு புலவர் சிவகிரிக்குப்போய்ச் சொல்லியகவி:—

வேண்டாதமருவலரைவென்றரசுபுரியுமுயர்வேந்தேநாளுந்
தூண்டாதமணிவிளக்கேவரகுணராமேந்திரனேசொல்லக்கேளாய்
கூண்டாரவாரமுடனின்றனுபதியுடன்யான்கூடப்போனேன்
வாண்டாயன்றலைமறைந்தான்செம்பொன்வடமலைத்திருவன்வழங்கினனே.

வாண்டாயன் — கோட்டைச்சமீந்தார்.

சேற்றூர்ச்சமீந்தாரிடத்திலே ஒரு புலவர்,

படிவாங்கப்படும்பாடுபரமசிவனறிவனவன்பங்கில்வாழும்
வடிவாளுமறிவளவண்மக்களுக்குந்தெரியும்

எனக்கூறினர்; உடனே சமீந்தார் புலவர்கழுத்தைப்பிடித்துக்கொண்டு இனி வசையாகக் கூறாமல், நசையாகக்கூறவேண்டுமென்றார். புலவரும் அப்படியேசொல்கிறேனென்று தலையசைத்தார். சமீந்தார்கையைவிடவே, புலவர் பின்வருமாறு அந்தப்பாடலைப் பூர்த்திசெய்தார்.

இந்தவருத்தந்தீர்ப்பாய்
முடிவேந்தரடிதாழ்ந்துமுறைமுறையேபணிந்தேத்துமுருந்தாமேலாந்
துடிவேந்தாரதிகாந்தாதுரைத்திருவாதரைக்கொருவாசுகிர்தவானே.

(தொடரும்)

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

பல்லவ உற்பத்தி.

பண்டைக்காலத்திலே தென்னாட்டின்கண் மிகவுங்கீர்த்திவாய்ந்து செங்கோலோச்சிய மன்னர்கள், சேர, சோழ, பாண்டியர்கள் என்பது, தண்டமிழ்நூல்களானுஞ் சாசனங்களானும் யாவருக்குந் தெரிந்தனவே! அவர்போல வேறுசில இடைப்பட்ட அரசர்சரித்திரங்கள், ஆராய்ச்சிக்கு இன்றியமையாத சாதனங்கள் அகப்படாமையால், இறந்தொழிவன வாயின; அவற்றுளொன்று பல்லவரென்னும் நாமம்வகித்த அரசர்கள் சரித்திரமாகும்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் பத்தாம் நூற்றாண்டுவரை தொண்டைமண்டலமென்னும் ராஜ்யத்தைக் காஞ்சியிலிருந்து பல்லவ ரென்னுமோர் அரசவம்மிசத்தினர் மிகவும் பிரபலமாய் அரசாண்டுவந் தார்களென்பதுகேட்கப்படுகின்றது. சென்றநாலாண்டுக்குட் சிலமேதா விகளால் வெளியிடப்பட்ட சிற்சில ஆராய்ச்சி உதவியைக்கொண்டும், சென்னைச் சிலாசாசனபரிசோதகரது பிரகடனஅறிக்கையைக்கொண்டும் ஒருவாறு அவர்களது வம்சாவளியும் ஆண்டகாலமும் வெளியாயின கிருஷ்ணாநதிமுதல் கன்னியாகுமரிக்குட்பட்ட இடங்களில் அவ்வப் போழ்து கண்டெடுக்கப்பட்ட சாசனங்களினின்றும், அவர்களது ஆட் சிப்பரப் பிவ்வளவென்பதும், அவர்கள் ஆந்திர, சோழ, பாண்டியர்களை வெற்றிகொண்டு இலங்கைவரையுந் தனியாட்சிபுரிந்து கீர்த்திப்பிரதாப முற்றார்களென்பதும், தஞ்சாவூர்ச் சோழவரசரின் சார்வபௌமத்தின் பின் அழிந்து ஒழிந்து போனார்களென்பதுந் தெரியப்படுகின்றன. அவர்கள் ஆட்சிக்காலத்தில், முதலிற் புத்தசமணமதங்களும், பின்பு வைணவ, சைவமதங்களும் மிகவுஞ் சிறப்புற்றோங்கி வளர்ந்திருந்த தற்கு, காஞ்சியிலும் மாமல்லபுரத்திலு மின்றுங்காணப்படுங் கற்றளி களும், நுண்ணியசிற்பச்சிலைகளுஞ் சான்றுபகரும். ஆனால் அப்பல்லவர் கள் யாவர்? அவர்கள் எங்கிருந்துவந்தனர்? எவ்வம்மிசத்தினர்? இந் நாமம் எவ்வாறு பெற்றனர்? என்பனவாதியகேள்விகட்கு ஏற்றவிடை இதுகாறு மகப்படாது சேண்மைக்கண் ணிருப்பதுகொண்டு ஈண் டாராய்வான் எடுத்துக்கொண்டாம்.

வின்ஸன்ற்சிமித் (vincent smith) என்னும் ஆங்கிலசரித்திராசிரியர் தாமெழுதிய புராதனஇந்தியாவின் சரித்திரம் என்னும் அரிய நூலின் முதற்பதிப்பின்கண்ணே, காஞ்சி, வெங்கி, பாலக்கடாவென்னும் நகரங்களிலிருந் தரசாண்டவரசர்களைக்கொடுத்த பல்லவரென்னுங் குலத்தினருடைய சாதி, மரபொன்றுந் தெரியவில்லையென்று பகர்ந்து, அவர்க ளொருவேளை வடவிந்தியக்கிரந்தங்களிலும், சாசனங்களிலுஞ் சொல்லப்படும் "பாரதியன்" அல்லது "பாரசிய" வகுப்பினரைச் சேர்ந்த "பாஹலவர்"களாய் இருக்கலாமோவென்று ஆசங்கித்தார். ஆனல், வடமேற்குக் கணவாய்வழியாய் வந்து இந்தியாவிற் புகுந்த இப் "பாஹலவர்" வம்சித்தார் மத்திய இந்தியாவையுந் தெக்கணத்தையுங் கடந்து எவ்வாறுவந்தார்கள்? கிழக்குக் கரையோரத்திலிருக்குங் காஞ்சியிற்சென்று தங்கள் இராச்சியத்தை எப்படி நிலைநிறுத்தினர்கள்? வழிகளிலிருந்த ஆந்திரம் முதலிய வலிமைமிக்க இராச்சியங்களை எவ்வாறு தாண்டிச்சென்றுர்களென்பதும், காஞ்சியிலுங் காடுகெடுத்து நாடாக்கி உறைந்தார்களா? அல்லது முன்னிருந்த அரசரை வெற்றிகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்தார்களா? என்பதும் முதலிய ஆராய்ச்சிகள் ஈண்டைக்கேற்புடைத்தாகும். டாக்றர் பிளீற் (Dr. Fleet) டாக்றர் பேர்ஜேஸ் (Dr. Burgus) முதலிய சாசனஆராய்ச்சிவல்லுநர்கள் பொறித்த மேற்காட்டிய மறுப்புரைகள் முந்தியகொள்கையுடையாருக்கு மயக்கத்தைக் கொடுக்கத்தக்கனவாயின. அதனை முன்னிட்டு கசுOஅ-ம் ௵ வெளிவந்த தாமெழுதிய சரித்திரநூலினிரண்டாம்பதிப்பின்கண்ணே, பல்லவரும், பாஹலவரு மொருவரென்பதையும், அவர்களின்பாரசீய உற்பத்தியையும், டாக்றர்பிளீற் போன்ற மேதாவிகள் மறுக்கவியலாவிடினும், பல்லவர்கள் சென்னைமாகாணத்தின் வடபக்கத்திற்றேன்றிய குலத்தினராகவேண்டுமென்று அச் சிமித் என்பவர் ஒருவாறு ஒப்புக்கொண்டவராயினர். அதுவுமன்றித் தென்னிந்தியாவிலுள்ள வேளாளர், கள்ளர், பள்ளர் என்னுஞ் சாதியார்கள் பல்லவர்களைச் சேர்ந்தவர்களென்று பாராட்டுவதால், தாம் முந்திச்சொன்னவற்றிலும் பூரணப்படாது இன்னுந் தெற்கே அவர்கள் உற்பத்தியைத்தேடவேண்டுமென்றுங் கூறிப்போர்ந்தனர்.

அதன்பின் பதினெருவருடங்களாகப் பல்லவருற்பத்தியைப்பற்றி அறியப் போதிய ஆதாரங்கள் ஒன்றும் அகப்படாதபடியால் கசுகசு-ம்

௵ பதிப்பித்த ஆக்ஸ்போர்ட் இந்திய சரித்திரத்தில், இனிமேல் வெளி வருஞ் சரித்திரவாராய்ச்சிக்காரர், பல்லவர்களைப்பற்றிய முழுச்சரித்திரத்தையும் அவர்கள் உற்பத்திமுதலியவற்றையும் நன்காராய்ந்து அறிவிக்கும் வரை, இந்தியசரித்திரத்திலுள்ள இருட்டறைப்பொருள்களில் இதுவுமொன்றாகவைத்து ஊகிக்கப்படவேண்டுமென்று அச்'சிமித்' என்பவரே கருதினார்.

பின்பு, பல்லவர்களின்சரித்திரத்தையும், வம்சாவளியையும் சாசன மூலமாக எவ்வளவோசிரமத்துடன் ஆராய்ந்து வெளியிட்டவரும், தென்னிந்திய பூர்வசரித்திரத்தில் ஆராய்ச்சிவல்லுநருமாகிய ஜூவோ டபறியூல் (Jouveau Dubreiul)என்னும் பிராஞ்சியமேதாவியார், வின்ஸன்ற் சிமித் எனபவரின் ஐயத்தைநீக்குதற்பொருட்டு, கசுஉ௰௬௵ வெளிப்படுத்திய "தக்கணத்தின் பூர்வசரித்திரம்" என்னுங்கிரந்தத்திற் பல்லவரின் உற்பத்தியை ஆராயப்புகுந்தும், பல்லவரென்னும்பெயர் பாஹலவ ரென்னும் நாமத்தின் திரிபென்பதைத் தம் மனத்தினின்றும் அகற்றக் கூடாதவராயினார். வேலூர்ப் பாளையத்திலகப்பட்ட தாமிரசாசனத்தில், பல்லவ அரசர்களின் மூலபுருடன் சர்ப்பவரசனின் மகளை (நாககன்னிகையை) மணந்து அரசுரிமையைப்பெற்றான் என்று சொல்லியிருக்கும் கூற்றை ஆதாரமாகக்கொண்டு, பாஹலவ-நாகசம்பந்தத்தைத் தேடுவாராயினர். ஒரு பாஹலவனுக்கும் நாககன்னிகைக்குமிடையில் கல்யாணம் நடந்திருந்தாலும், அக்கன்னிகையின்பிதா கிழக்குக்கரையோரம் வரைக்கும் அரசாண்டிருந்து தன் மருகனுக்குக் காஞ்சியையடுத்த பிரதேச அரசுரிமையைக்கொடுக்கும் பாக்கியமுடையவனாயிருந்தாலும், வேலூர்ப்பாளைய சாசனக் கர்ணபரம்பரைப்படி பல்லவருற்பத்தி ஐயந்திரிபற நிலைநிறுத்தப்படத்தக்க பூரணசாட்சியாயமையுமென நினைத்தார் போலும்.

பின்னும், அக்காலத்துப் பழையசாசனங்களைத் துருவியாராய்ந்து ஆபராந்தா லென்னு நகரி லரசாண்ட சிற்றரசர்களாகிய Western Satrapas என்னும் மாராட்டிர வரசனொருவனிடம் பாஹலவ வம்மிசத்தானொருவன் அமைச்சனாக வமைந்திருந்தானென்பதைக் கண்டுபிடித்து, அவ்வமைச்சனே அவன் மகனோ மத்தியதேசத்தி லொருசிறு பகுதியை அரசாண்ட நாகவம்மிசத்தாராகிய சுட்டுநகரில் ஒருபெண்ணை

மணாந்த சாதவாகனன் என்னும் ஆந்திரவரசனின்மகனாகிய சிவஸ்கந்த—நாக—சாதகர்ணியின்மகளை மணம் முடித்திருக்கலாமெனக் கூறினார். இத னோடமையாது, கூடலூரில் (Cuddalore) எடுக்கப்பட்ட சிலநாணயங் களில் ஸ்ரீபுலுமாயியென் றிருக்கக்கண்டு, அப் புலுமாயி யென்ற ஆந்திர வரசனே தொண்டைமண்டலத்தையுஞ்சேர்த்துக் கிழக்குக்கரையோரம் வரைக்கும் அரசாண் டிருக்கவேண்டுமென்றும், சிவ—ஸ்கந்த—நாக—சாத கர்ணியே அப்புலுமாயி யென்றும், காஞ்சியைமத்தியாகக்கொண்ட பிர தேசத்தை அவன் தன் மருகனாகிய பாஹலவனுக்குக் கொடுத்து, அவ னைக் காஞ்சியில் அரசாளவைத்திருக்கவேண்டுமென்றும், அம்மருகனின் சந்ததியாரே பல்லவரென்னும்பெயருடன் காஞ்சியிலிருந் தாசாண்டவ ரென்றும், இவ்வாறான போலிப்பிரமாணங்களைத் துணைக்கொண்டு பல் லாற்றானும் இடர்ப்படுவாராயினர். அவையும் நிலையிலவாயின. சாத வாகனரும், சுட்டுநாகரும், மேற்கு மகாராட்டிரரும் ஒருகாலத்தவரெனச் சாதிப்பதற்கும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாஹ லவ—நாக கல்யாணத்தைப் பொருத்துவதற்கும் அவர்பட்டபிரயாசமோ சிறிதன்று. ஆனால் பலவாண்டுகட்கு முன்னமே நிராகரித்த பாஹலவ சம்பந்தத்தைப் பூர்த்தியாக்கிவிட்ட அவர்கூற்றைக் கொள்வதற்கு மாறாகப் பிரபலநியாயங்களிருப்பதால், வின்ஸன்ற்ஸிமித் அவர்கள் கொள் கைப்படி, சென்னைக்குத்தெற்கேயுள்ள தமிழர்வம்மிசத்தைப் பல்லவர் சேர்ந்தவரோ அன்றோ வென்னும் ஆராய்ச்சியிற் சிறிது நுழைந்து பார்ப்பாம்.

மேலைத்தேசத்துச்சரித்திரஆராய்ச்சிநிபுணர்கள் தங்களாராய்ச்சியில் வேண்டுமிடத்துப் பழையதமிழ்நூல்களைப் பாவித்திருந்தால் இவ்வித மான விபரீதங்களும் ஐயப்பாடுகளும் எவருங்கொள்ளுதற்கு இடமிரா. ஆனால், இப்போது சிலவருடங்களாக மகாமகோபாத்தியாயர் சுவாமிநா தையரவர்களாலும் வேறுசில புண்ணியசீலர்களாலும் கைம்மாறுவேண் டாக் கடப்பாட்டினைக்கொண்ட நன்முயற்சியால் அநேக தமிழ்நூல்கள் அச்சிவர்ந்து வெளிவந்தபடியால், சரித்திரவாராய்ச்சிக்கு மிகவும் பிரயோ சனப்பட்டன. அவைகளுட் கடைச்சங்கநூல்களிலொன்றாகிய மணி மேகலையோ இவ்வாராய்ச்சிக்கு மிகவும் உபயோகப்படத்தக்க நூலா யிருப்பதோடு அஃதே பீடமுமாயது.

கி. பி. முதலாம்நூற்றுண்டுமுடிபினும் இரண்டாம்நூற்றுண்டுத் தொடக்கத்தினும் சோழராச்சியத்தைப் புகார் என்றழைக்கப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்திருந்து அரசாண்டவன் கரிகாற்பெருவளத்தான் என்னும் அரசனுவான். அவனுக்குப்பின் னரசாண்டவன் நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வென்வேற்கிள்ளி, கிள்ளிவளவன் என்னும் பல பெயர்களினுல் மணிமேகலையில் வழங்கப்பட்ட அக் கரிகாலன்மகனேயாவன். அவன்காலத்திற்றுன் புகாரைக் கடல்கொண்டது மன்றிச் சோழராச்சியங் குன்றிவரவுந் தலைப்பட்டது. இவனே புகாரிற் கடைசியாயாண்ட சோழவரசன். காஞ்சிபுரத்தில் அரசுசெய்தவனும் பெரும்பாணாற்றுப்படையிற் கடியலூர் உருத்திரங்கண்ணனுரால் புகழப்பட்டவனுமாகிய தொண்டைமான் இளந்திரையனென்பான் இக்கிள்ளியின் மகனுவான். மணிமேகலையிற் புகாரைக் கடல்கொண்டமைக்கு நியாயங்கூறுமிடத்துப்

"பொங்குதிரையுலா அம்புன்னையங்கானற்
கிளர்மணிநெடுமுடிக்கிள்ளி" க்குமுன்
"நாகநாடுநடுக்கின்றுள்பவன்
வாகைவேலோன்வளைவணன்றேவி
வாசமயிலைவயிற்றினுட்டோன்றிய
பீலிவளை"

யெனச்சொல்லப்பட்ட நாககன்னிகை,

" இளவேனிலிறுப்பவிறும்பூதுசான்ற
பூநாறுசோலையாருமிலொருசிறைத்
தானேதமியளொருத்திதோன்ற"

அவளைவிழைந்து ஒருமாசங்காறும் அவளுடனின் றின்பம்நுகர்ந்தும் அவள் தான் யாரென்றுசொல்லாது,

"பலர்புறங்கண்டோன்பணிந்துதொழில்கேட்ப
வொருமதியெல்லைகழிப்பினுமுரையாள்
பொருவரும்பூங்கொடி"

மறைந்துபோயபின்,

"யாங்கொளித்தனளவ்விளங்கொடியென்றே
....தேர்வுழி",

யொருசாரணன்றோன்றி,

"இரவிகுலத்தொருவனிணைமுலைதோயக்
கருவொடுவருமெனக்கணியெடுத்துரைத்தன
னங்கப்புதல்வன்வரூஉமல்லது
பூங்கொடிவாராள்"

என்றுசொல்லியபடி,

"நாகநன்னாடாள்வோன்றன்மகள்
பீலிவளையென்பாள்பெண்டிருள்மிக்கோள்
பனிப்பகைவானவன்வழியிற்றோன்றிய
புனற்றிளங்குழவியொடுபூங்கொடிபொருந்தியித்
தீவகம் (மணிபல்லவம்) வலஞ்செய்துதேவர்கோனிட்ட
மாபெரும்பீடிகைவலங்கொண்டேத்துழிக்
கம்பளச்செட்டிகலம்வந்திறுப்ப
வங்கவன்பாற்சென்றவன்றிறமறிந்து
கொற்றவன்மகனிவன்கொள்கெனக்கொடுத்தலும்"

அச்செட்டி உவகையோடுவாங்கிச்செல்லலும், மரக்கலங் காரிருளிற் கால் வாங்கிக்கவிழவும், உடன்கொணர்ந்தமைந்தனைக் காணாது கெடுகலமாக் கள் கிள்ளிக்குரைப்ப, அவ்வரசன் மகனுக்குற்றது பொருணாய் நன் மணியிழந்தநாகம்போன்று, கானலுங்கடலுங்கரையுந்தேடி, எங்குந்திரி வதில் இந்திரவிழாவைமறக்க, மணிமேகலாதெய்வம் விட்டசாபத்தாற் புகாரைக் கடல்கொண்டது எனக் கூறப்பட்டிருக்கின்றது.

இனிப் பெரும்பாணாற்றுப்படையில் "அந்நீர்த் திரைதருமரபின் ....பல்வேற்றிரையன்" என்னுமடிகளுக்கு "நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவா... நால் நாகலோகத்தேசென்று, நாககன்னிகையைப் புணர்ந்தகாலத்து... யான் பெற்ற புதல்வனை என்செய்வேனென்ற பொழுது, தொ... டையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவன்

வந்து கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சிகொடுப்பனென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையன் என்ற பெயர்பெற்றகதை கூறினார்" என இளந்திரையனைக் கருதும் உரைக்குறிப்பிலே நச்சினார்க்கினிய ரென்னும் உரையாசிரியர் எழுதிச்செல்கின்றார்.

ஆகையினாற், சோழக்கிள்ளிக்கு நாககன்னிகைபாற் பிறந்தபிள்ளை சம்பளச்செட்டியின் கலங்கெட மாண்டொழியாது திரைதரக் கண்டெடுக்கப்பட்டானென்பதும், தொண்டைமானிளந்திரையனென்னும் பெயருடன் இவனே அவன்தந்தைபா லரசுரிமையெய்தப்பெற்றுக் காஞ்சியிருந் தரசுசெய்தவனென்பதும், அவனுடைய பெயரானே அவனரசாண்டதேசம் தொண்டைமண்டலமென்றழைக்கப்பட்டதென்பதும், இருநூலிடத்துங் கூறப்பட்டவனொருவனேயென்பதும் வலியுறுகின்றமைகாண்க.

இத்திரையன்வழியினரே தெற்கே சோழபாண்டியர்களையும் வடக்கே ஆந்திரர் முதலிய வரசர்களையும் வலிகுறையச்செய்து வெற்றிகொண்டு பலநூற்றாண்டுகளாகச் சார்வபௌமசக்கரவர்த்திகளாய் அரசுசெய்த பல்லவராவார்கள். ஆனால், அவ்வம்மிசத்துப் பிற்காலவரசர்கள் இளந்திரையன்வழிவந்தவர்களென்பதை மறந்தோ அல்லது அதை மறைக்கும் நோக்கமாகவோ, அன்றித் தாங்களுங் கௌரவமானவொரு வம்மிசாவளியை உண்டாக்கிக்கொள்ளவேண்டுமென்னுமாசையினாலோ, யாதோ தாங்கள் பரத்துவாசகோத்திரமென்றும், மகாபாரதத்திற் சொல்லப்பட்ட துரோணாச்சாரியர்மகன் அஸ்வத்தாமன் வழித்தோன்றல்களென்றும், சூரியசந்திரவம்மிசத்தவர்களென்றும், பலபடப் புனைந்து புராணவம்மிசாவளியொன்றை உண்டாக்கிவைத்துக்கொண்டார்கள். ஆனாலும், அவர்கள் சோழவுற்பத்தியை மறைத்தாலுந் தங்கள் நாகவுற்பத்தியை மறக்கவில்லை. கி. பி. 330 வரையிலரசாண்ட விஷ்ணுகோபனுக்கு முன்னிருந்தவனென்றெண்ணப்படும் ஸ்கந்தசிஷ்யன் என்னும் அரசன்காலத்தில் வரையப்பட்ட ராயக்கோட்டைச்சாசனத்தில் அவ்வரசன், நாககன்னிகையை மணம் முடித்தஅஸ்வத்தாமன் வம்மிசமென்று புகழப்பட்டிருக்கின்றான்.

பிற்காலத்தில் நாகர் பாம்புகளென்றும், தென்னாட்டையுணர்த்துங் "கீழ்நிலம்" என்னும் பதம் பாதாளம் பிலத்துவாரமென்றுஞ் சனங்கள் நம்பியிருந்தகாலத்தில், சோழன் நாகபட்டினத்துப் பிலத்துவாரத்தால் நாகலோகம்போய் நாககன்னிகையை விழைந்தானென்று நச்சினார்க்கினியர் உரையுங்கூறவே, அவர்கள் கொள்கை பின்னும் வலிபெற்று நிலைகொண்டது. இஃது விந்தையினும் விந்தையே! கிள்ளியென்னுஞ் சோழன் நாககன்னிகையைக் காண்பதற்கு அப்படியானவொருபாதாளத்துக்குப் போகவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனின், அக்காலத்தில் மிகநாகரிகமடைந்து புகழ்படைத்து வாழ்ந்த நாகரென்னுஞ் சாதியார் இலங்கையிலும், இந்தியாவின் பலவிடங்களிலும் வசித்தார்களென்பதை இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்மிசத்திலும் வேறுபலநூல்களிலும் பாக்கக்காணலாம்.

இதுகாறுங் கூறியவற்றால், காஞ்சிபிலிருந்து பன்னூற்றாண்டுகளாக வரசாண்ட பல்லவவரசர்கள் சோழக்கிள்ளிக்கும் நாககன்னிகைக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையன் வம்மிசத்தவரென்பது பெற்றாம். பெறவே, சோழன்விழைந்த பீலிவளையென்னும் நாகர்சாதிப் பெண் எத்தேசத்தவளென்பதைப்பற்றி யினி யாராய்வாம்.

கிறிஸ்துவுக்குப் பன்னூற்றாண்டுகட்குமுன்றொடக்கமாகி நாகராச்சியமென்னுமோர் அரசுநிலை இலங்கையின் வடபாகத்து நாகதீபத்திலும், மேல்பாகத்துக் கல்யாணியென்னுமிடத்திலும் பிரசித்திபெற்றிருந்ததென மகாவம்மிசத்திற் கூறப்படுகின்றது. மத்திய இந்தியாவிற் போகவதியென்னுமிடத்தே ஒரு நாக ராச்சியமிருந்ததாக இந்தியவிதிகாசங்கள் தெரிவிக்கின்றன இப்போகவதியிலிருந்த நாகரே பின்பு சுட்டுநாகர்களென் றழைக்கப்பட்டார்கள்போலும். இலங்கையின் நாகதீபமே மணிமேகலையிற்கூறப்பட்ட மணிபல்லவம் என்னும் இடமாகுமென அநுமானிக்கலாம். நாகதீபத்திலிருந்த ஓர் அழகிய மணியிழைத்த ஆசனத்தைக் கவர்தற்கிச்சித்து மாமனும் மருகனுமாகிய இரண்டு நாகவரசர்கள் தங்களுட்பிணங்கிச் சேனைகளுடன்சென்று சமர் செய்யும்பொழுது, புத்தன் அவர்கள்மத்தியிற் றோன்றி, இருவர்க்கும் நீதிகூறி ஒற்றுமையாகிய தர்மத்தை விளக்கிப் போதித்தனர் என்றும், அப்போதவனையிற் சாந்தமடைந்து அவரடியிற்பணிந்து அந் நாகவரசர்க

ளிருவரும் அவ்வாசனத்தைப் புத்தனுக்குப் பீடிகையாகக் கொடுத்தார்க ளென்றும் மகாவம்மிசம் கூறுகின்றது. இனி,

"விரிந்திலங்கவிரொளிசிறந்துகதிர்பரப்பி
யுரைபெறுமும்முழநிலமிசையோங்கித்
திசைதொறுமொன்பான்முழநிலமகன்று
விதிமாணுடியின்வட்டங்குயின்று
பதுமசதுரமீமிசைவிளங்கி
யறவோர்க்கமைந்தவாசன"

மொன்றைக்

"கீழ்நிலமருங்கில்நாகநாடாளு
மிருவர்மன்னவரொருவழித்தோன்றி
யெமதீதென்றேயெடுக்கலாற்றார்
தம்பெரும்பற்றுநீங்கலும்நீங்கார்
செங்கண்சிவந்துநெஞ்சுபுகையுயிர்த்துத்
தம்பெருஞ்சேனையொடுவெஞ்சினம்புரிநா
ளிருஞ்செருவொழிமினெமதீதென்றே
பெருந்தவமுனிவனிருந்தறமுரைக்கும்
பொருவறுசிறப்பிற்புரையோரேத்துந்
தருமபீடிகை"

"இருங்கடல்
வாங்குதிரையுடுத்தமணிபல்லவம்"

என்னுந்தீவி லிருந்ததாக மணிமேகலையிற் சொல்லியிருப்பதால், அந் நாகதீபமும் மணிபல்லவமும் ஒன்றெனக்கருதலாகும்.

சமனொளிபாதமென்னும் "பாதபங்கயமலை" இருக்கும் இரத்தினத் தீவமென்று சொல்லப்படும் இலங்கைத்தீவினருகே மணிபல்லவமிருப்ப தென,

"ஈங்கிதனயலகத்திரத்தினதீவத்
தோங்கியசமந்தம்"

என்று மணிமேகலையிற் குறிக்கப்பட்டிருப்பதால், அம் மணிபல்லவம் முன்னே தீவமாயிருந்து இப்போது குடாநாடாகிய யாழ்ப்பாணமென்று தீர்மானிக்கலாம்.

அதுவுமன்றித், 'தேவநம்பிபதிஸ்ச' வென்னுமிலங்கையரசன் காலத்தில் இலங்கைக்குப் புத்தசமயத்தைக்கொணர்ந்த புத்தபிட்சுக்களும், வெள்ளரசும், சங்கமித்தவென்னும் பிக்குணியும், மகதநாட்டுச் சனங்களும் வந்திறங்கிய ஜம்புக்கோளையென்னுந் துறை நாகதீபத்திலுள்ளதென்று மகாவம்மிசத்திற் சொல்லியிருப்பதாலும், அக்காலத்தே ஜம்புக்கோளையிற் கட்டிய திஸ்சமகாவிகாரையும் நாட்டிய வெள்ளரசுமிருந்தவிடங்கள் இன்றுந் திஸ்ஸமளுவை போதிமளுவை யென்னும் பெயர்களால் வழங்கிவருதலாலும், அந்த ஜம்புக்கோளை யிப்போது யாழ்ப்பாணம் வடகரையிலுள்ள சம்புத்துறையென் றழைக்கப்படுந் துறையென வறியலாம். நாகவரசர்கள் வெகுண்டு போர்செய்து கவர்வதற்கு ஏதுவாயிருந்ததும், புத்தனிருந்து தர்மத்தை உபதேசித்ததும், அநேக நூற்றூண்டுகளாகப் புத்தர்களினல் வணங்கப்பெற்றதும், மணிமேகலைக்கு முந்திய பிறப்புக்களை யுணர்த்தியதுமாகியபுத்தபீடிகையிருந்தவிடம் இப்போது அநேகபுத்தகட்டிடங்கள் அழிந்து மண்மேலிட்டுக்கிடக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடையென்னுங் கிராமமென்றெண்ணுவதற்குப் போதிய பிரமாணங்களுள. கந்தரோடையிற் கண்டெடுக்கப் பட்டனவும் கி. மு. ஐந்தாம் நூற்றூண்டு தொடங்கி, கி. பி. ஐந்தாம் நூற்றூண்டுவரை வழங்கிவந்தனவுமான பலதேயத்து நாணயங்கள், அக்கந்தரோடையின் பழமைக்கும் புராதன மகிமைக்கும் சாட்சிபகர்கின்றன. அன்றியும், முற்காலத்தில் நாகவரசர்களிருந் தரசாண்ட தலைநகரமாகிய கதிரைமலையாகும் அக்கந்தரோடையையும் ஜம்புக்கோளைத்துறை

யையுங்கொண்ட யாழ்ப்பாணநாடே புராதன மணிபல்லவமும் நாகதீபமு மென நிச்சயிக்கலாம்.

நாகபட்டினத்திலே பிரபல நாகராச்சியமொன் றிருந்ததென்ப தாகச் சரித்திரவாயிலாலேனும் கர்ண பரம்பரையாலேனும் அறியக்கிட வாதபடியாலும், பீலிவளையென்னும்பெண் தான் தங்கிய மணிபல்லவத்தி லிருந்து தன்புதல்வனாகிய இளந்திரையனை வங்கமேற்றி யவன்றந்தை பாற்சேரும்படியனுப்பிய சரிதங்கேட்கப்படுவதாலும், கிள்ளிவிழைந்த நாகப்பெண் மணிபல்லவத்து அரசன்மகளென்றே தீர்மானிக்கலாம். இதனுடன், மணிமேகலையிற்கூறப்படும்,

> " பாரகவீதியிற்பண்டையோரிழைத்த
> கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சியொடு
> மாமணிபல்லவம்வந்ததீங்கெனப்
> பொய்கையும்பொழிலும் "

காஞ்சியிற் கிள்ளிவளவன் நிர்மாணித்து அழகுபெறச்செய்தானென்னு மிவ்வடிகள், தன்னாற்காதலிக்கப்பட்ட மணிபல்லவத்து நாககன்னி கையை மகிழ்வித்தற்பொருட்டாகவேசெய்திருக்கலாமெனக் கருதுவதற் கிடந்தருகின்றன.

இதுகாறுங்கூறியவாற்றால், பல்லவவம்மிசத்தின்மூலபுருடனாகிய இளந்திரையனுடையதாய் மணிபல்லவத்து நாககன்னிகையானபடியால் அவனுடைய சந்ததியார் அந்நாககன்னிகையின்தேயத்தின் பெயரை வகித்துப் பல்லவரென்றழைக்கப்பட்டார்கள். அன்றியும் பல்லவம் என்னும் பதம் 'தளிர்' அல்லது 'கிளையின்பசுமையாகியநுனி' யென் னுங்கருத்தைக்கொண்டது. அக்காலத்தில் வங்காளக்குடாக்கடலிற் பிரயாணஞ்செய்த தமிழ்வங்கமாக்களுக்கு அத்தீவின்தோற்றம் இந்தியா வின்தென்பாலிருந்தோ, அல்லது இலங்கையின் வடபாலிருந்தோ

முளைத்த தளிர்போலத் தோற்றியபடியால், அத்தீவுக்குப் பல்லவமென்னும் பெயரிடப்பட்டதாயிருக்கலாமென நிச்சயிக்கலாம்.

பிந்திய பல்லவவரசர்கள் 'தளிர்' என்னும் பொருளைத்தரும் 'அங்கூர'வென்னும் வடமொழிப்பதத்தை விகுதியாகக்கொண்ட "புத்தியங்கூர", "நாயங்கூர" "தருணங்கூர", "லலிதங்கூர" வென்னும் பட்டங்களையும், அக்கருத்தமைந்த "போத்து" என்னும் தமிழ்மொழிப்பதச் சார்புபெற்ற "போத்தராயர்" என்னும் பட்டத்தையும், அக்காலத்தே ஆண்டுவந்திருத்தலாற், 'பல்லவம்' தமிழ்ச்சொற்றொடரென்பதும், மணிபல்லவத்துடன் ஒற்றுமையுளதென்பதும், பாரசீயதேயத்துப் பாரதியன் வகுப்பினரைச்சேர்ந்த பாஹ்லவருக்கும் இதற்கும் எவ்விதத்திலும் சம்பந்தம் உண்டாகமாட்டாதென்பதும் யாவருக்கும் ஒப்பமுடிந்த முடிவாயினமை காண்க. இலங்கையின் வடபாகத்திலிருக்கும் யாழ்ப்பாணத்துக்குச்சேர்ந்த பல்லவராயன்கட்டென்னுமூரும், யாழ்ப்பாணத்துப் பலவிடங்களிலும் வழங்கும் போத்தராயர் என்னுந் தெய்வவணக்கமும், பல்லவராயன் நளம்பராயனென்னுங் குலப்பெயர்களும், யாழ்ப்பாணத்துக்கும் பல்லவருக்குமுள்ளசம்பந்தத்தை ஒருவாறு ஆதரிக்கும்.

மேற்காட்டிய கொள்கைப்படி சென்னைக்குத்தெற்கேயுள்ள தமிழ் நாட்டினின்றே பல்லவருற்பத்தியைத் தேடவேண்டுமென்ற சிமித் ஆசிரியரின்கொள்கை வலிபடைந்ததும், சிவ-ஸ்கந்த-நாக-சாதகர்ணியின் மகளை மணந்த பாஹ்லவ மந்திரியின் வம்மிசத்தவரென்ற கொள்கை வலியிழந்ததும் தெள்ளிதாயினமை காண்க.

C. Rasanayagam Mudaliyar.

அருவியன்காதை.

[௧௬௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

நோக்க வும்பொருள் நோக்ககில் லாமலே
ஆக்கம்விண் டவர் போல்அல மந்தனன்
பூக்க ளாம்கரம் பொம்மெனக் கொட்டியே
மீக்கொள் மூரல்மின் னாளும் அரும்பினாள். (79)

"புல்லும் ஆரப் புயத்து று தித்திரட்
கல்லும் ஏற்கிலா கட்டழ கீர்! கவின்
இல்லை என்றோ கரடமும் ஈர்ந்திரை
செல்லும் வெண்மையில் சேர்கின்றவே" என்றாள். (80)

வேயும் சங்கமும் வீயிண ரும்நலம்
தீயும் என்னும்மென் றோளிய சேயிழாய்!
"தோயும் தீமைநம் தொல்பிறப் பால்; அவை
மாய்வதற்கு மருந்தும் உண்டோ" வென்றான். (81)

"வம்பறாத மரைமலர் மேனியீர்!
கொம்ப றாத கொடிகள் பறிந்திடர்
வெம்பு றாவிழ மீக்குரு விக்குழாம்
கும்பு றாவீழ் கொடுமைஎன்?" என்கின்றாள். (82)

"கோல நாசிக் குமிழ மலருளாய்!
ஞாலம் மேல்சிலர் நாடு நயங்கெடுத்
தாலம்எய் துன்ப ஆழி அமிழ்த்துபுன்
சீலம் எய்பல தீயர் உளர்" என்றான். (83)

"வஞ்சம் என்ப மறம்என்ப மக்கட்கோர்
நஞ்சம் என்ன நடுங்குளத் தூய்மையீர்!
மஞ்சரும் சிறுபுல் மருட்டும் முயல்
துஞ்சத் தீத்தொழில் சூழ்வதென்னோ?" என்றாள். (84)

எண்ணில் பல்லுயிர் எய்து மிடியும்தன்
கண்ணில் எய்திய என்னக் கவல்அருட்
பெண்ணி னுயகமே! இப் பிரபஞ்சத்
துள்நிற்க உயிர்ஒன்றை ஒன்றுண்ணு மால். (85)

கேடென்பாய், கிளர் வன்மையி னுல்வரும்,
பாடென்பாய், பலபன்னி உழைக்கு வாய்,
சூடக வெயில் சுற்றும் கரத்தினுய்!
நீடியற் கையின் நீதி உயிர்க்கொலே. (86)

வானில் மண்ணில் வளைந்த கடல்தன்னில்
ஊனில் வந்த உயிர்த்தொகை கண்ணுறில்,
மேனின்ற உயிர் கீழவை வெல்லும்காண்,
தேனின் வந்த செழுமலர்க் கூந்தலாய்! (87)

புல்லைத் தீய்க்கும் புழுவெனில் அப்புழுக்
கொல்லத் தீய்க்கும் குருவியினம்; அவை
சில்லர் தீய்ப்பர்; அச் சில்லர் தமைஅடல்
வெல்லுமா விழுங்கி, முறை வீயுமே. (88)

ஆதலால் இன்மை உண்மையதாய் உண்மை,
எதில் இன்மையதாய் இயலாத போல்,
ஓதுயிர் கெடின் அன்றி உயிர் வரா,
பூதலத் தினில் என்றறி பூவையே! (89)

என்னுங் காலேதன் காந்தன் எழில்முகம்
தன்னே நோக்கித் ததும்புமநீர்க் கண்ணினுள்
பின்னும் பின்னும்நீர் பில்கிச் சலம்கொளும்
வன்ன நீலம் மதியிடைக் காட்டினுள். (90)

வெப்பம் காய்ந்த விரிமலர் என்னவோ?
ஒப்பில் கால்வந் துடற்றுகொம் பென்னவோ?
தப்புமுன் அசுணம் எனச் சாற்றவோ?
எப்பரி சுரைக்கேன் உருதேசியை? (91)

ஐய! நீர் சொல்வ தாற்றுகிலேன், இவண்
வெய்யர் கூறும் விதியன்றோ நம்முறை,
வையம் மேல்மறம் மட்டற ஓங்குமே
கையறக் கருணை தான் கழலினே. (92)

என்று கூறி இரக்கம் இரங்கிமுன்
நின்ற பான்மையந் நேரிழை வாட்டம்தன்
கன்றும் உள்ளம் கசிந்துருகக் கொளீஇ
"நன்றுபாவை! என்நல்லிசை கேள்" என்றான். (93)

வேறு.

இருந்தே ஆங்கோர் தடம் சோலை
இமிழ் நீர் அருவி மாடொலிப்ப
அருந்தேன் அமுதம் ஆம் இவையும்
அல்ல பிறவு மேஇனிமை
பொருந்தா என்ன யாழின் இசை
விருந்தங் களிக்கப், பூங் கொடியும்
முருந்தின் மூரல் சிறிதிலங்க
மோன உருவே தான்ஆனாள். (94)

அன்ப னோடும் சிறுகாலை
ஆங்கண் உறைந்தே அகம் அடர்ந்த
துன்பம் துடைத்த பின்னர் அந்தச்
சோலை நாப்பண் சுடர்விரித்துப்
பொன்புல் தாது புடைவிரித்து
புகழ்போல் மணக்கும் மலர்த்திடத்தின்
இன்பூ டகலும் அன்னமென
இலங்கும் பூணாள் ஏகினளால். (95)

வேறு.

செகம் மகிழ்ந்திடும் மாதரார்
அகம் அலர்ந்தெழு மானினி
புகும் இடந்தொறும் இரசம் ஏய்
முகம் மலர்ந்தன ஊரசமே. (96)

எரித்த சூடக வால் வளை
தரித்த கையினள் சார்தலும்,
விரித்த பந்தரின் கீழவாய்
சிரித்து நின்றன முல்லையே. (97)

தசும்பில் வீ தழையா வென
ஒசிந்த மெல்இடை கண்களில்
பசந்த மேனியோ டாகமும்
கசிந்து நோக்கின கருவிளை. (98)

"கோதை தாழ்சுரி கூந்தல் நம்
மீது அன்பு செறிந்தனள் ;
கா தல் காட்டுவம் நாம்," எனப்
போது விண்டன பாதிரி. (99)

"ஆம்பல் ஒத்தமுதூறும் வாய்
காம்பிணங்கெழில் தோளிபால்
நாம் பிணங்குவதென் ?" எனத்
தேம்பிச்சாம்பின செண்பகம். (100)

"வல்லி தீங்கிவண் ஓர்கிலாள்
நல்ல தீயன ஆகுமே
அல்லதில்" லெனவே துயர்
புல்லி வாடின மல்லிகை (101)

(வேறு)

தத்தை வாய் அமுதெத்துணை யெனச்
சாற்றல் சால் மொழி மாதராள்
ஒத்த மாமலர் ஆனகைத்தலம்
தொத்துலாம் மலர் கூட்டினள் ;
கத்தன் ஆம் புஉதன் புகுத்த
கடுத்த தூதர்கள் நால்வரும்
இத்திசைதனில் உற்ற பெற்றியும்
ஈங்கெடுத்துரை தாங்குவாம். (102)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(கஅச-ம்பக்கத் தொடர்ச்சி).

26. பொழுது(உ)ணர்(வு) அரிய அப் பொரு(வு)இல் மா நகர்த்
தொழு தகை மடந்தையர், சுடர் விளக்(கு)எனப்
பழு(து)அற, மேனியைப் பார்க்கும் ஆசை கொல்
எழுது சித் திரங்களும் இமைப்(பு)இ லாதவே!

இ-ள். (எங்கும் இரத்தினப் பணிகள் மிகுந்து, அவற்றின் பேரொளியால் எப்போதும் பகல்போலிருத்தலால், இது பகல் இது இரவு என்று) பொழுது (விகற்பம்) அறியமுடியாத அந்த நகரத்தில் உள்ள மாதாது வடிவத்தைப்பார்க்கும் விருப்பத்தினாலோ (அவர்வாழும் மாளிகையில் எழுதப்பெற்றுள்ள) சித்திரங்களும் இமையாதவைகளாயிருக்கின்றன!

பொருவு-ஒப்பு. இல்-இல்லாத. தொழு தகை மடந்தையர்-(கற்பினால்) தொழுந்தகுதியுடையமாதர். மடந்தையர்மேனி யெனக்கூட்டுக. இயல்பாக இமையாத சித்திரங்களை மாதரழகைப்பார்க்கவிரும்பியோ இமையாதனவாயிருக்கின்றனவென்று, அவரழகை அவாவிநோக்கும் ஆடவர்கண் இமையாத்தன்மையைச் சித்திரங்களின்மேலேற்றிக் கூறியது தற்குறிப்பேற்ற அணி இதனை உற்பிரேட்சை அலங்காரமென்பர் வடநூலார். மாதர்வனப்பை வாஞ்சித்து நோக்கும் மைந்தர்கண் இமையாமை பின்வரும் சிந்தாமணிப்பாட்டில் இனிது வருணிக்கப்பட்டிருப்பதைக் காண்க.

மாதர் தன் வனப்பு நோக்கி, மகிழ்ந்து கண் இமைத்தல் செல்லான்,
காதலித்(து) இருப்பக், கண்கள் கரிந்து நீர் வரக்கண்(டு), அம்ம!
பேதமை, பிறரை உள்ளி அழுபவர்ச் சேர்தல் என்றாள்:
வேதனை பெருகி வேற் கண் தீ உமிழ்ந் திட்ட அன்றே.

27. இரவியிற் சுடர்மணி இமைக்கும் தோரணத்
தெருவினிற் சிறியன, திசைகள்: சேண் விளங்(கு)
அருவியிற் பெரியன, ஆனைத் தானங்கள்:
பரவையிற் பெரியன, புரவிப் பந்தியே.

இ-ள். (அந்த நகரத்துத்) தெருக்களைக்காட்டிலும் திசைகள் சிறியவை (=தெருக்கள் திக்குகளினும் விசாலமானவை): யானைகளின் மதநீர் (அருவி)கள் (மலை) அருவிகளினும் பெரியவை: குதிரைப்பந்திகள் கடலினும் பெரியவை.

இரவியின் - சூரியனைப்போல. சுடர்மணி - ஒளியுடைய இரத்தினங்கள். இமைக்கும் - ஒளிசெய்யும். சேண் விளங்கு அருவி - (மலையுச்சியில் தோன்றி) ஆகாயத்திலே பிரகாசிக்கும் அருவி. தானம் - மதம். பரவை - கடல். புரவி - குதிரை. பந்தி - நிரை - வரிசை.

தெருக்களின் விசாலமிகுதியும் யானைத்திரள் குதிரைத்திரள்களின் மிகுதியும் விதந்து கூறப்பட்டன.

28. தெள் வார் மழையும் திரை ஆழியும் உட்க, நாளும்
வள் வார் முரசம் அதிர் மா நகர் வாழும் மாக்கள்,
கள்வார் இலாமல், பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமல், கொடுப்பார்களும் இல்லை மாதோ.

இ-ள். (இடிக்கும்) மேகமும் (ஒலிக்கும்) கடலும் அஞ்சும்படி தினந்தோறும் பேரிகைகள் முழங்காநின்ற அந்தநகரத்திலே வாழும் மாந்தர்கள், களவுசெய்வாரில்லாமையால், பொருள்களைக் காவல் செய்வதில்லை. (அங்கே எல்லாரும் செல்வராய்) இரப்பாரில்லாமையால், கொடுப்பாருமில்லை.

தெள் வார் மழை - தெளிந்த நீரையுடைய மேகம். திரை ஆழி - அலைகளையுடைய கடல். நாளும் - தினமும் - தினந்தோறும். வள் வார் முரசம் - வளமான தோல்வார் (கட்டிய) பேரிகை. "வள்வு - வார். 'வள்வாய்ந்து பண்ணுக திண்டேர்' வெ. மாலை. பெருந்திணை. 22" (பாலகாண்டம் அரும்பதவுரை, அ. குமாரசுவாமிப்பிள்ளை த. கனகசுந்தரம் பிள்ளைபதிப்பு). 'வள்' என்பதற்கும் 'வார்' என்பதற்கொப்பத் தோல்வார் என்னும் பொருள் உண்டு. அப்பொருள் கொண்டால், வள்வார் முரசு மீமிசைஞாயிறுபோன்றதாம்; 'வள்வார்முரசு' என்பதற்கு வார்(கட்டிய) நெடுமுரசென்ற பொருள் கொள்ளலுமாம். 'வள்வார் முரசம்' என்பார் சிந்தாமணியாரும். • சிந்தாமணி ௩-ம்பதிப்பு அரும்பதவுரையைப் பார்க்க.

29. கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை ; அவை வல்லர் அல் லாரும் இல்லை:
எல்லாரும், எல்லாப் பெரும் செல்வமும் எய்த லாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ.

இ-ள். (அந்த நகரத்திலே, பலவகைக்) கல்விகள்முழுதும் கல்லாதவர் (ஆகிய) பிறர் (எவரும்) இல்லாததனால், கல்விகள் முழுதும் (கற்று) வல்லார் (இவரென்று சிறப்பித்துக் கூறுதற்குரியார் எவர்)களும் இல்லை ; அவை (=அக்கல்விகள்) வல்லாரல்லார் (இவரென்று இழிவுபடுத்திக் கூறுதற்குரியாரும் எவர்) களும் இல்லை: எல்லாரும் எல்லாச்செல்வங்களையும் பொருந்தியிருத்தலால், (செல்வம்) இல்லார் (இவர் என்று கூறுதற்கு எவர்)களும் இல்லை; (மேற்கூறியவாறு எல்லாரும் செல்வராய் அதனால் வறியார் ஒருவரும் இல்லாததனால், இவர்) உடையார் (என்று பிரித்துக் கூறுதற்கும் எவர்) களும் இல்லை.

'கல்விமுற்ற' என்பதனைத் தாப்பிசைப் பொருள்கோள்முறைப்படி 'கல்லாது நிற்பார்' என்பதன்முன்னும் 'வல்லாரும்' என்பதன்முன்னும் கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. [தாப்பிசைப்பொருள்கோள்—இடையில் நிற்கும் மொழியை முன்னும் பின்னும் கூட்டிப் பொருள்கொள்ளல்.] 'அவை வல்லரல்லாருமில்லை' என்பதற்குக் "கற்றவர் கூடிய சபையில் வல்லவர்களல்லாதவரும் இல்லை" என்ற பொருளும் உண்டு.

இப்பாட்டின் முற்பாதி இரண்டடிகளுக்குப் பின்வரும் பொருளும் கூறலாம்.—(முடிவுகாணமுடியாத இயல்பினையுடைய பலவகைக்கல்விகளையும் எல்லாரும் பயின்றுகொண்டேயிருத்தலால், சில அளவு படித்து மேற்கொண்டு) படியாமல் நின்றுவிடுவார் (ஆகிய) பிறர் (எவரும்) இல்லாததனால், (படித்து நிறுத்திவிட்ட ஒருவரது) கல்விகள் முழுதும் (கற்று) வல்லார் (இவர் என்று சொல்லுதற்குரியார் எவர்) களும் இல்லை ; (மேற்கூறியவாறு படித்துக்கொண்டிராதவர் ஒருவரும் இல்லாததனால், முடிவில்லாத) அக் கல்விகள் (சிறிதாயினும் கற்று) வல்லாரல்லார் (என்று சொல்லுதற்குரியாரும் எவர்) களும் இல்லை.

இப்பாட்டின் சுருக்கமான கருத்தாவது.—அந்நகரத்திலே எல்லாரும் கற்றவர்களாயிருத்தலால், இவர் கற்றவர், இவர்கல்லாதவரென்று

சொல்லுதற்கில்லை: எல்லாரும் செல்வராயிருத்தலால், இவர் செல்வர், இவர் வறியர் என்று சொல்லுவதற்குமில்லை.

இப்பாட்டில், 'கல்லாது நிற்பார்................வல்லாருமில்லை' என்ற பகுதியும், இதற்கு முந்திய 'கேள்வார்' என்ற பாட்டின் இறுதியிரண்டடிகளும், நாட்டுப்படலத்தில் 'வண்மையில்லை' யென்றபாட்டின் முதல் மூன்றடிகளும், சிலசிறப்புக்களை அவற்றின் எதிர்மறையின்மையால், இல்லை என்றுகூறிக் குறைபாடின்மையை உணர்த்தும் தன்மையில் ஒத்திருத்தல் கவனிக்கத்தக்கது.

30. ஏகம் முதல் கல்வி முளைத்(து)எழுந்(து), எண் இல் கேள்வி
ஆ(து)அம் முதல் திண் பணை போக்கி, அரும் தவத்தின்
சாகம் தழைத்(து,) அன்(பு) அரும்பித், தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அனறே.

இ - ள். (அந்த நகரத்திலே) கல்வி (ஆகிய ஒருமர) மூலம் முளைத்து வளர்ந்து, கேள்வியாகிய கிளைகிளைத்துத், தவமாகிய தழை தழைத்து, அன்பாகிய அரும்பு அரும்பித், தருமமாகிய மலர்மலர்ந்து, போகமாகிய பழம் பழுத்தது (என்றுகூறும்படி, அந்த நகரத்து மாந்தர், கல்வி கேள்வி தவம் அன்பு தருமம் போகம் ஆகிய இவைகளைச் சிறப்பாக உடையார்.)

கல்வி ஏகம் முதல் முளைத்து - கல்வியாகிய ஒரு (மரத்து) மூலம் உண்டாகி. கேள்வி ஆது அம் திண் முதல் பணை போக்கி—கேள்விகளாகிய அழகிய வலிய அடிக்கிளை விட்டு. அரும் தவத்தின் சாகம்—அரியதவமாகிய இலை. [தவத்தின் என்பதில் உள்ள அத்து இன் இரண்டும் சாரியைகள்] அன்பு அரும்பி—அன்பாகிய அரும்பு அரும்பி. தருமம் மலர்ந்து—தருமமாகிய பூப் பூத்து. போகம் கனி ஒன்று பழுத்தது—போகமாகிய பழம் ஒன்று பழுத்தது. போகம் என்பதில் அட்டபோகமும் அடங்கும். அட்டபோகம் - எட்டு நுகர்பொருள்கள். அவை யாவன:—1. பெண், 2. ஆடை, 3. அணிகலன், 4. போசனம், 5. தாம்பூலம், 6. பரிமளம், 7. பாட்டு, 8. பூ அமளி. [அமளி - மெத்தை].

அரசியற்படலம்.

31. தாய் ஒக்கும், அன்பின்; தவம் ஒக்கும், நலம் ப யப்பின்;
சேய் ஒக்கும், முன் நின்(று) ஒரு செல் கதி உய்க்கும் நீரால்;
நோய் ஒக்கும் என்னின், மருந்(து)ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் பு கும் கால் அறி(வு)ஒக்கும், எவர்க்கும் அன்னன்.

இ - ள். (இராமாயண கதை தொடங்குங்காலத்தில் அயோத்தி நகரத்திலிருந்து அரசாண்ட அரசர்,) எல்லாருக்கும், அன்பினுல் தாயை நிகர்வார்; நற்பலன் அளிப்பதில் தவத்தை ஒப்பார். செல்லுதற்குரிய நற்கதியிற் செலுத்துவதில் (மறுமையில் நற்கதியிற் சேர்க்கும்) புத்திரனை நேர்வார்; (தண்டனைசெய்வதில்) நோய்போல்வாரென்றுலோ, (தயை செய்வதில்) மருந்தும்போல்வார்; நுண்ணிய நூல்களை ஆராயப்புகுந்தால் (நுட்பமான பொருள்களைக் கண்டுபிடிக்கும்) அறிவுக்குச் சமானமாவார்.

'எவர்க்கும்' என்பதைத் 'தாய் ஒக்கும்' 'தவம் ஒக்கும்' என்பவை முதலியவற்றுக்குமுன் இயைத்துப் பொருள்கொள்க. நலம் பயப்பின்- நன்மை பயப்பதில். உய்க்கும் நீரால் - செலுத்தும் தன்மையினுல். நுணங்குதல் - நுணுகுதல். கேள்வி - நூல். (சிந்தாமணி மூன்றும் பதிப்பு அரும்பத அகராதி) அன்னன் - அத்தன்மையினன்—இப் படலத்தில் இதற்கு முந்திய மூன்றுபாட்டுக்களிற் கூறிய தன்மைகளை யுடையவன்.

'நோயொக்குமென்னின்மருந்தொக்கும்'என்பதற்கு 'நோய்பொருந்தி ஞல் (அதனைநீக்குவதில்) மருந்துபோல்வார்' என்றும் பொருள்கொள்ள லாம். ஒத்தல் - இயைதல். (பரிபாடல் அரும்பத அகராதி)—பொருந் தல் (சங்க அகராதி).

32. ஈந்தே கடந்தான், இரப்போர் கடல் எண் இல் நுண் நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவெனனும் அளக்கர் வாளால்
காய்ந்தே கடந்தான், பகைவேலை; கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான், திருவின் தொடர் போக பௌவம்.

இ - ள். (அவர்) யாசகராகிய சமுத்திரத்தை (அவர்கள் திரும்ப இரவாதபடி நிரம்ப)க்கொடுத்தே தாண்டினுர்; அறிவாகிய சமுத்திரத்தை

அளவற்ற நுண்பொருள்நூல்களை ஆராய்ந்தே தாண்டினர்; பகைவரா கிய சமுத்திரத்தை வாளாற் கொன்றே தாண்டினர், போகசமுத்திரத் தை ஆசைதீர அனுபவித்தே தாண்டினர்;

அளக்கர் - கடல். காய்தல் - கொல்லல் (உ-ம். "தந்தையைக் காயில் என்பெறுவாயென" திருவிளை-மாபாத. கக. சங்க அகராதி) கருத்து - இச்சை (உ - ம். "ஒத்தகருத்திலர்"கோயிற்பு. இரணி. எச. சங்கஅகராதி) (கருத்தில் உள்ள) ஆசை. முற்ற - நிறைவேற. தோய்தல் - (இன்பத் தில்) முழுகல் - (இன்பத்தை) அநுபவித்தல். திருவின - செல்வத்தி ஞல். தொடர் - பின்தொடர்கின்ற - வந்தடைகின்ற. போகம், 30-ம் பாட்டின் உரையைப்பார்க்க. பௌவம் - கடல்.

அவர் யாசகக் கடலை கொடைக்கப்பலாற் கடந்து ஏற்பாரின்மைக் கரை ஏறினர்: அவ்வாறே, முறையாக அறிவு, பகை, போகமாகிய கடல்களை, ஆராய்தல், கொல்லல், அனுபவித்தலாகிய கப்பல்களாற் கடந்து இனியறியத்தக்கதின்மை பகையின்மை நிராசையாகிய கரை களை அடைந்தாரென்க.

33. வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்,
தள் அரும் பெரும்புகழ்த் தசரதப் பெயர்
வள்ளல், வள் உறை அயில் மன்னர் மன்னனே.

இ - ள். (அவ்வரசர் தமது செங்கோல் முறைமையால், மழை மிகு தல் குறைதலின்றி நிதானமாகப் பெய்தலால்) ஆற்றுவெள்ளம், (குறை வால் முன்பாய்ச்சற்காரர் வாய்க்காலூடு அணைகோலித் தடுத்தலும், மிகுதியாற் கரைகளையுடைத்துச்சிதறியோடலும் இல்லாமல், வாய்க்காலே வழியாக) ஒருவழியே செல்லவும், (அந்தச் சமமழையால் தானியவகை விளைவும் புல்புதற்செழிப்பும் உண்டாதலால் எங்கும் உணவிருத்தலால்) பறவைகளும் மிருகங்களும்(எப்போதும் ஒருகால் உணவுதேடிச்சென்ற) ஒருவழியே செல்லவும், (அந்த மத்தியமழையாற் குறைவற்ற செல்வம் பெற்ற வைப்பாளரைப்பெற்று, அவரால் வேண்டுவன வேண்டியவாறே பெற்று, வேறுபுருடரைத் தேடாமல்) வேசியர் மனமும் ஒருவழியே செல்லவும் (நீதிநிலையில்) நிற்பவர்; (என்றும்) நீங்காத பெருங்கீர்த்தி

படைத்த தசரதனென்னும் பெயருடைய பெருங்கொடையாளி; (பகைவரின்மையால்) உறையிற்றங்கிய வேற்படையுடைய இராசாதிராசர்.

வள்-வாள் உறை. உறை-இரு-தங்கு. அயில் - வேல். வள் உறை அயில்—உறையிற்றங்கிய வேல்.

இயல்பில் ஒருவழிப்படாத நான்குபொருள்களை அடுக்கிக்கூறி, அவைகளெல்லாவற்றையும் ஒருவழிச் செல்லச்செய்தல், செங்கோல் முறைமையாலாயதென்றார்.

34. நேமி மால் வரை மதில் ஆக, நீள் புறப்
பாமம் மா கடல் கிடங்(கு) ஆகப், பல் மணி
வாமம் மா ளிகை மலை ஆக, மன்னற்குப்
பூமியும் அயோத்தி மா நகரம் போன்றதே.

இ - ள். சக்கரவாளகிரி மதிலாகவும், பெரும்புறக்கடல் அகழியாகவும், மலைகள் மாளிகைகளாகவும், பூமியும் தசரதருக்கு அயோத்தியை ஒத்தது.

மால் (—பெருமை) நேமி (—சக்கரம்) வரை (—மலை)—பெரிய சக்கரவாளகிரி. பாமம் - பரப்பு. மாபுறக்கடல் - பெரும்புறக்கடல். கிடங்கு—அகழி. வாமம் - அழகு. 'புறமாகடல்' என்றிருப்பதை 'மாபுறக்கடல்' என்றும் 'மாளிகை மலை ஆக' என்றிருப்பதை 'மலைமாளிகையாக' என்றும் கூட்டுக.

இக் கவிக்கருத்து, பூமியும் அயோத்திபோன்று தசரதன் ஆளுகைக்குள் அடங்கியதென்பது.

35. வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிர் இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர் எலாம் உறைவ(து) ஓர் உடம்பும் ஆயினன்.

இ - ள். அவர் மன்னுயிரெல்லாம் தம்முயிர்போலப் பாதுகாத்தலால், உலகத்தில் உள்ள சகல சராசர ஜீவராசிகளும் வாழும் ஓர் உடம்பு போன்றார்.

வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ப்பினன் - வயிரமிழைத்த சிறந்த ஆபரணங்களை அணிந்த சிங்கம் போன்ற பலமுடையவன். ஓம்பல் - பாதுகாத்தல். சென்றுவாழ் உயிர் - சஞ்சரிக்கும் உயிர்கள் - சரம். நின்றுவாழ்உயிர்-இடம்பெயராத உயிர்கள்-அசரம். உறைவதோர் உடம்பு-உறைவதாகிய ஒப்பற்ற உடல். ஆயினன் - ஒத்தான். "ஆள்வாரிலி மாடாவேனோ" (திருவாசகம்) என்பதிலும் ஆதல் ஒத்தலெனப் பொருள் படுதல் காண்க. உடல் உயிரைத்தாங்குவதுபோலத், தசரதர் உலகத்து வாழ்வாரையெல்லாம் தாங்கினர் என்பதும், உடலினும் உயிர் அருமையானதுபோலத் தம்மினும் தம் குடிகளை அருமையாகக் கருதினரென்பதும் உய்த்துணரவைத்தார்.

36. மண் இடை உயிர்தொறும் வளர்ந்து தேய்(வு)இன்றித்
தண் நிழல் பரப்பவும், இருளைத் தள்ளவும்,
அண்ணல் தன் குடை மதி அமையும்; ஆதலால்
விண் இடை மதியினை மிகை இ(து) என்பவே.

இ - ள். தசரதருடைய (வெண்கொற்றக்) குடையாகிய சந்திரன், வளர்தலுடையதாய்த், தேய்தல் இல்லாததாய், எல்லா உயிர்களுக்கும் (துன்பமாகிய அக) இருளை நீக்கவும், (இன்பமாகிய அக) ஒளியைப் பரப்பவும் அமையும்; ஆதலால், ஆகாயத்திலுள்ள சந்திரன் அநாவசியகமென்று (அறிஞர்) கூறுவார்கள்.

நிழல்—1. ஒளி - நிலவு; 2. அருள் - (பத்துப்பாட்டு மூல அரும்பத விளக்க அகராதி). இருள்—1. இருட்டு; 2. மயக்கம். பரிபாடல் அரும்பதவகராதி. குடைநிழல் பரப்பல், அருள்செய்தலெனவும், இருளைத்தள்ளல், மயக்கத்தை நீக்குதலெனவும் பொருள்கொள்ளலுமாம். அமையும் - போதும். மிகை - (வேண்டும் அளவுக்கு) மிகுந்தது. என்ப - என்று சொல்லுவர்.

37. குன்(று)என உயரிய குவவுத் தோளினன்
வென்றி அம் திகிரி, வெம் பரிதி ஆம் என,
ஒன்(று)என, உலகிடை உலாவி, மீமிசை
நின்று நின்(று) உயிர்தொறும் நெடிது காக்குமே.

இ-ள். மலைபோல உயர்ந்த திரட்சியுடைய தோளுடையராகிய அவரது வெற்றிபொருந்திய ஆக்ஞைசக்கரம் சூரியனைபோல (உலகத்துக்கு) ஒன்று (போதும்) என உலகிலே எங்கும் சென்று (மற்றைய அரசரது ஆக்ஞை சக்கரங்களுக்கு) மேலாக நின்று நிலையானதாய் எல்லா உயிர்களையும் (அததற்கு அப்போதப்போது வரும் ஆபத்துக்களைநீக்கித்) தனித்தனி பாதுகாவா நிற்கும்.

உயரிய - உயர்ந்த. குவவு - திரட்சி. வென்றி - வெற்றி. ஒன்றென—1. உலகத்துக்குச் சூரியன் ஒன்றே அமையும், பலசூரியர் வேண்டியதில்லை என்பதுபோலத் தான் (தசரதர் சக்கரம்) ஒன்றே உலகத்துக்குப்போதும்; ஏனைய அரசர் சக்கரங்கள் வேண்டியதில்லையென; 2. (எங்கும் வியாபகமான ஏக பராபரவஸ்துவேபோல).

38. எய்யென எழ பகை எங்கும் இன்மையால்,
மொய் பொரு தின(வு)உறு முழவுத் தோளினன்,
வையகம் முழுவதும், வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்(து)இனி(து) அரசு செய்கின்றான்.

இ-ள். (அம்புகளை) எய்யென்று (போர்முழக்கஞ்செய்துகொண்டு) தம்மேல்வரும் பகைவர் எவ்விடத்தும் இல்லாததனால், பகைவரோடு போர்செய்தற்கு உண்டாகும் தினவுபொருந்திய தோள்களையுடைய தசரதர், ஒரு தரித்திரன் (மிகுந்த சாக்கிரதையாகப்) பாதுகாக்கின்ற (அவனுக்குள்ள) ஒரே வயல்போல, உலகமுழுவதையும் (கவனமாகக்) காவல் செய்து அரசாட்சி செய்கின்றார்.

மொய்—1. போர்; 2. பகை (புறப்பொருள் வெண்பாமாலை அரும்பத அகராதி). பொருதல் - போர்செய்தல். மொய்பொரு தினவு.—1. போர் பொருதற்கு உண்டாகும் தினவு; 2. பகைவரோடு போர்செய்தற்கு உண்டாகும் தினவு. முழவு—மத்தளம். ஓம்புதல் - காத்தல். செய் என - வயலினைப்போல.

தசரதர் அரசுசெய்தது நம் கண்ணெதிர் நிகழ்வதுபோலச் செய்யக்கருதி 'அரசுசெய்கின்றான்' என நிகழ்காலத்தாற் கூறினார். இவ்வாறு நடந்தொழிந்ததை நடக்கின்றதாகக்கூறும் நிகழ்காலத்தைச் சாரித்திரநிகழ்காலம் (Historical present) என்பர் ஆங்கிலேயர்.

திருஅவதாரப்படலம்.

[தசரதர் வசிட்டரைநோக்கித் தமக்குப் புத்திரன் இல்லாததனுல், தமக்குப்பின், உலகம் காப்பாரின்றி வருந்துமேயென்ற கவலே தம்மை வருத்துகின்றதென, வசிட்டர் முன்பு நிகழ்ந்ததை நினைவுகூர்ந்தார். அது வருமாறு:—தேவர்களெல்லாம் தங்களுக்குத் துன்பஞ்செய்துவந்த இராக்கதரை விட்டுணுவே கொனறாலன்றிப் பிழைப்பில்லையென்று ஆலோசித்து முடிவுசெய்து அவர் உதவியைவேண்டி அவரைத தியானித்தார்கள். அப்போது,]

39. கரு முகில் தாமரைக் காடு பூத்து, நீ(டு)
இரு சுடர் இரு புறத்(து) ஏந்தி, ஏந்(து)அலர்த்
திருவொடும் பொலிய,ஓர் செம் பொன் குன்றின் மேல்
வருவ போற் கலுழன் மேல் வந்து தோன்றினுன்.

இ-ள். கரிய மேகம் (உடல் நிறையத்) தாமரைபூத்துச் சந்திர சூரியரை இரு பக்கங்களிலே தரித்து இலக்குமி (நடுவிலே) விளங்கச் செம்பொன்மலேமேல் வருவதுபோல, (மேகம்போன்ற கரியதிருமேனியை யுடைய திருமால், செந்தாமரைமலர்கள்போலக் கண் வாய் உந்தி கை பாதங்கள் பொலிய, முறையே சந்திரசூரியர்போன்ற சங்கசக்ரங்களே இடப்புறத்தும் வலப்புறத்தும் இருகைகளில் ஏந்தித் திருமகள் திரு மார்பில் வீற்றிருந்து விளங்கச் செம்பொன்மலே சிறகுபடைத்தாற் போலும் கருடன்மேல்ஏறி) வந்தருளி (அவர்களுக்குப்)பிரசன்னமானுர்.

தாமரைக்காடு—(செந்) தாமரை (மலர்) மிகுதி. இருசுடர் - சூரியன் சந்திரன். ஏந்து அலர்த்திரு — (தன்னேத்) தாங்கிய (தாமரை) மல ரிடத்துள்ள இலக்குமி. 'ஏடவிழ்திரு' என்று பல பிரதிகளில் உள் ளது. அதற்கு இதழ்விரிந்த (தாமரைமலரிடத்துள்ள) இலச்குமி யெனப் பொருள்செய்யப்பட்டிருக்கிறது. ஏடு என்பதற்கே பூ என்ற பொருள் உண்டு. (ஏடு—பூ. உ-ம் ஏடவிழ்கூந்தலாய். சங்கஅகராதி) 'வருவது' எனற்பாலது செய்யுள்வழக்காக வருவ என ஈறுகுறைந்தது. கலுழன் - கருடன்.

[அவ்வாறு பிரசன்னமானவர் அரக்கரை அழிக்க 'நானும் சங்கசக்க ரங்களும் ஆதிசேடனும் தசரத குமாரராக அவதரிப்போம், எமக்குத்

துணையாக நீங்களெல்லீரும் வானராகுங்கள்' என்று கூறிச்சென்றார். அவ்வாறே, அவர்கள் வானராகப்பிறந்தார்கள். இம் முன்நிகழ்ச்சிகள் நினைவில்வர, வசிட்டர் தசரதரைப் "புத்திரகாமேட்டி என்னும் யாகம் செய்க" என்றார். அவர் அந்த யாகத்தைச் செய்ய, அவர் மனைவியரில், கோசலைக்கு இராமரும், கைகேயிக்குப் பரதரும், சுமித்திரைக்கு இலக்குமண சத்துருக்கரும் பிறந்தார்கள்.

பிறந்தவர்கள் வளர்ந்து கல்விபயின்று யௌவனப்பருவம் அடைந்த காலத்தில், இணைபிரியாத இராமலக்குமணரைக் காண்போரெல்லாம், மழைகண்டு செழிக்கும் பயிர்போலக் களித்தார்கள். 'இவ் அரசிளங் குமாருக்கு நல் வாழ்வு அருள்க' என்று தத்தம் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தனைசெய்வதில் ஆடவரும் மாதரும் முறையே தசரதரையும் கோசலையையும் போன்றனர். அவர்கள், கரியநிறமுள்ள இராமரும் பொன்னிறமுடைய இலக்குமணரும் கூடி உலாவுதலைக்கண்டு களித்து (கண் வாய் உந்தி கை கால்களாகிய) தாமரைபூத்த கருங்கடல் மேருமலையோடு திரிதலொக்கு மென்பார்கள்.

இராமபிரான், தம் எதிர்வருவோரை, அகம் நெகிழ்ந்து, முகம் மலர்ந்து, புன்னகை அரும்ப, கண்கள் கருணை ததும்ப, இனிது நோக்கி, "உமக்குத் துன்பமில்லையே? உம் மனைவியர் மக்கள் சுகமோ? குறித்துச் செல்லும் காரியம் யாது?" என்று அன்புடன் வினவ, அவர்கள், "திக்கற்றவர்களுக்குத் தந்தையாக உள்ள உம்மை அரசாகப்பெற்ற எமக்கு யாதொரு குறைவுமில்லை: நீர் இவ்வுலகத்தை நீடூழி ஆள்வீராக" என்று மனமார வாழ்த்திச் செல்வர். இவ்வாறு அயோத்திமாநகரமாந்தர் அனைவரும் வாழ்த்தத் தம்பியர் தம் திருவடிநிழல் நீங்காராய்ப்போற்ற, இராமபிரான் வாழ்தல்கண்டு, தசரதர், அளவில்லாத ஆனந்தக்கடலுள் ஆழ்ந்திருந்தார்.]

கையடைப்படலம்.

கையடை - அடைக்கலம். (வாலிவதைப்படலம்-கஙக "கையடையாகும்") படலம்-நூற்பகுதி. இப்படலம், தசரதர், இராமலக்குமணரை, விசுவாமித்திரரிடம், அடைக்கலமாகக்கொடுத்ததைக் கூறுவது.

[இவ்வாறு தசரதர் களித்து வாழுங்காலத்திலே, அவர், ஒருநாள், தேவர்கள் இந்திரசபாமண்டபமோவென்று சந்தேகிக்கும்படியான தமது அரசிருக்கைமண்டபத்தை அடைந்து,]

40. தூய மெல் அரிஅணைப் பொலிந்து தோன்றினன்,
செய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
நாயகன் இவன் கொல் என்(று) அயிர்த்து நாட்டம் ஓர்
ஆயிரம் இல்லை என்(று) அயிர்ப்பு நீங்கவே.

இ-ள். (அந்தச்சமயத்திலே, இந்திரனது காரியமாக, அவ்வழியே) விண்ணிலே சென்றுகொண்டிருந்த (தேவ) தூதர்கள் (பலரும், தனித்தனியே, தம் மனத்தினுள்ளே, இந்தக்கொலுமண்டபம் நம் அரசன் கொலுமண்டபமேயாகத் தோன்றுகின்றது; இதிற் கொலுவிருக்கும் அரசன் தேவராசன்போன்றிருக்கின்றான்; உண்மையிலே) இவன் தேவராசனேவென்று சந்தேகித்து (ப்பின் இவனுக்கு இந்திரன்போல) ஆயிரங்கண் இல்லையென்று (தெரிந்து இவன் இந்திரனல்லனென்று) சந்தேகம் நீங்கும்படியாகச் சிங்காதனத்திலே (இந்திரன்பேல) விளங்கிக் கொலுவீற்றிருந்தார்.

அரி(—சிங்கம்) அணை (—ஆதனம்) — சிங்காதனம். செய் இரு விசும்பு சிந்தாமணியில் 'சேயுயர்மதில 'சேயுயர் உலகம்' எனபவை வருதல்போல வந்தது. (சிந்தா. அரும்பதவுரை பார்க்க). சேய் இரு விசும்பு - தூரமான பெரிய ஆகாயம். சேய் - தூரம் (பத்துப்பாட்டு உரையிற்கண்ட சொல்லகராதியையும் சங்க அகராதியையும் பார்க்க). 'வாய்மை' 'வாய்' என்பவை உண்மைஎன்றபொருளில்வருதல்போல, 'சேய்மை' 'சேய்' என்பவை தூரம் என்ற பொருளில் வருகின்றன. சாரணர் - தூதர். நாயகன்—(தேவர்க்குத்) தலைவன். அயிர்த்து - சந்தேகித்து. நாட்டம்-கண். ஐயம் - சந்தேகம்.

[மேற்கூறியவாறு வீற்றிருந்த தசரதர்முன்னே, உயிர்களெல்லாவற்றையும் அவைகள் உறையும் உலகங்களையும் தேவர்களோடு பிரமதேவரையும் இதோ! படைக்கின்றேனென்று படைக்கத் தொடங்கிய விசுவாமித்திர முனிவர் வந்தார். அவர் வரவும், தசரதர், பிரமதேவர் வரக் கண்ட இந்திரன்போல விரைந்தெழுந்து கீழ்வீழ்ந்து வணங்கி ஆதனத்தில் இருத்தி அருச்சித்து அவரைநோக்கி,]

41. "நிலம் செய் தவம் என்(று)உணரின், அன்று,நெடி யோய்!என்
நலம் செய் வினை உண் (டு,எனினும் அன்று;நகர் நீ யான்
வலம் செய்து வ ணங்க எளி வந்த இது முந்(து) என்
குலம் செய் தவம்" என்(று)இனிது கூற முனி கூறும்.

இ - ள். (இந்த) நகரத்திலே தேவரீரை அடியேன் வலம் வந்து வணங்கும்படி (வருதற்கரிய நீர்) இலேசில்வந்த (இந்தப்பாக்கியத்) துக்குக் காரணம், இந்தப் பிரதேசத்திலுள்ளார் செய்த தவமோ என்று ஆராய்ந்துபார்த்தால், அதுவன்று, தமியேன்செய்தநல்வினை புண்மையோ வென்றால், அதுவுமன்று, வேறு யாதெனின், முற்காலத்தில் என் வமிசத்தார்செய்த தவமேயென்று இனிதாகச் சொல்ல, முனிவர் சொல்வார்.

நலம் செய்வினை - நன்மையைச் செய்கின்ற வினை - நல்வினை. நகர்—நகரில். இவ்வாறு தாரணி (-பூமி)யில் என்பது தாரணி, எனத் திரு அவதாரப்படலம் 22-ம் பாட்டில் 'தசரதன் மதலையாய் வருதும் தாரணி' யென்பதில் ஏழாம்வேற்றுமை உருபு தொக்கு வருதல்காண்க. எளி வந்த—1. எளிதிற்கிடைத்த; இலேசில்வந்த (சங்க அகராதி.) இது - இந்தச்செயல் - இந்தச்செயலாகிய பாக்கியத்துக்குக் காரணம். முந்து என் குலம்—(எனக்கு) முந்திய என் குலத்தார்.

42. "என் அனைய முனிவரும் இமையவரும்
இடையூ(று) ஒன்(று) உடைய ரானல்,
பல் நகமும், நகு வெள்ளிப் பருப்பதமும்,
பாற்கடலும், பதும பீடத்(து)
அந் நகரும், கற்பக நாட்(டு) அணி நகரும்,
மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகல் உண்டோ,
இகல் கடந்த புலவு வேலோய்?

இ - ள். பகைவரை(க்குத்தி) வென்ற(தனால் அவரது) ஊன் (தங்கிய) வேலாயுதத்தையுடைய சக்கரவர்த்தியே! என்னைப்போன்ற முனி சிரேட்டர்களும் தேவர்களும் யாதாயினுமோர் இடையூற்றை அடைந்தாரானல், (அவர்கள் அதனைநீக்குதற்கு முருகக்கடவுளைநாடிக் குன்றுதோருடல் செய்வாராய் அவர் வாழும்) பலமலைகளையும், (அவ்வாறே பரமசிவனையும் திருமாலையும் பிரமதேவரையும் இந்திரனையும் உம்மையும் தேடி முறையே) கைலாயமலையும், பாற்கடலும், சத்தியலோகமும், அமராவதியும், இரத்தினகசிதமான மாளிகைகளையுடைய அயோத்திமாநகரமும் (புகலிடமாக அடைதல்) அல்லாமல், (வேறு) புகலிடமுமுண்டோ? (இல்லை).

என் (னை) அனைய-என்னைப் போன்ற. முனி-தவசி. வரம்-சிரேட்டம். வரர்-சிரேட்டர். முனிவரர்-தவசிரேட்டர்கள். இடையூறு-இடை(யில்)உறுதல்-(ஒருகாரியம் செய்யப் புகுந்தார்க்கு, அது முடியாதபடி இடையே உறும்)தடை-விக்கினம்.பன்னகம்-பல்(-பல)நகம்(-மலைகள்). நகுதல்-ஒளிவிடுதல் பிரகாசித்தல். பருப்பதம்-மலை. 'பதுமபீடத்தன்னகர்' என்றபாடமே பெரும்பான்மையான அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. அதன் பொருள், (பதுமபீடத்தன் நகர்-) தாமரைமலரை ஆதனமாக உடைய பிரமனது நகரம் என்பது. னகரம் இப்பாடத்தில்எதுகைநோக்கி இரட்டித்தது. மொழியைமுறித்து எதுகை அமைத்தல் சிறந்த முறையன்று. அதனிலும் இவ்வாறு விகாரமாகப் பதச்சேதம்பண்ணி எதுகை பெறுதல் விலக்கற்பாலது. இராமாயணமுழுவதினுமே, இப்படிப்பட்ட சிறப்பற்ற எதுகைவேறிருக்குமோ என்பது சந்தேகம்; ஆதலால் 'பதுமபீடத்தந்நகர்' என்றபாடம் சிறந்ததாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனைப் 'பதும பீடத்து அம் நகர்' எனப்பிரித்துப் (பிரமனது) பத்மாசந (மாகிய சிங்காதன)த்தை (த்தன்னிடத்தே) உடைய அழகிய நகரம் என்று பொருள் கூறலாம்; அன்றியும், 'பதும பீடத்து அந்(த) நகர்' எனப் பிரித்துப் பதும பீடத்தையுடைய (து எந்த நகரம்?)

அந்த நகரம் எனவும் உரைசெய்யலாம். கற்பகநாடு - கற்பகதருக்கள் உள்ள பொன்னாடு. அணிநகர்- அழகுடைய நகரம்-அமராவதியென்னும் இந்திரனது இராசதானி நகரம். புகல்-புகலிடம்-தஞ்சமாகப்புகுமிடம்-பற்றுக்கோடு. இகல் பகை. இகல் கடந்த-பகைவரைக்கொன்று செயித்த. புலவு-மாமிசம்.

"மஹாரிஷியாகியும் விசுவாமித்ரனுக்கு ஜன்மசுபாவமாகிய ரஜோகுணம் நீங்கிற்றில்லை என்பார் 'என்னனைய முனிவரும்' (—என்னைப் போன்ற சிறந்த முனிவர்களும்) என்ற சொல்லால் உணர்த்தினர். சாபாநுக்கிரக சாமர்த்தியத்தால் தேவரையும் பணிகொள்ளும் சிறப்பினால் முதலில் முனிவரையும் பிற்படத் தேவரையும் எண்ணியது. இவர்கட்கு ஓரோர்காலத்தில் யாதானும் துன்பம் தங்களுக்குத் தாமே நீக்கிக்கொள்வதற் கேலாதவாறு சம்பவிக்குமென்னும் கருத்துப்போதர, 'இடையூறு ஒன்று' எனக் கூறினர். 'பன்னகம்'—பல்நகம்—பலமலைகள்; குன்றுதோறாடல் முருகக்கடவுளின் படைவீடாறனுள் ஒன்றாதலானும், [அவர்] குறிஞ்சிநிலத்தெய்வமாதலானும், பலமலைகளைநாடல், அவரிடம் முறையிட்டுத் தங் குறைதீர்க்க வேண்டிக்கொள்வதனிமித்தமாம். இங்ஙனமே, கயிலாயம், பாற்கடல், பிரமனுலகம், இந்திரன் நகரம் இவற்றை முறைப்பட எண்ணினர். ஈசனாலும் அழிக்க இயலாத சூரனை அழித்த பெருமைதோன்ற முருகக்கடவுளை முன்னும் மஹாவிஷ்ணு முதலியோர்க் கிடுக்கண்விளைத்த திரிபுராதியர் சலந்தரன்போன்றோரை ஜயித்த காரணத்தாலும், ஸம்ஹார கிருத்தியத்தலைவனாதலின் தங்கள் சத்துருவைச் சம்ஹரிக்குமாறு வேண்டிக்கொள்ளும் நிமித்தத்தானும் பரமசிவத்தையும் காத்தற் கடவுளாதலின் தமக்கெய்திய இடுக்கணினின்று காத்தருளும்பொருட்டு மஹாவிஷ்ணுவையும்; ரிஷிகணங்கட்குத் தலைமைபூண்டவனாதலானும் நேரே தம் குறையறிந்து தவிர்க்கும் வழிகூறுவோனாதலானும் பிரமனையும்; முப்பத்துமுக்கோடி தேவர்கட்கு அரசனாய் வச்சிராயுதமும் அயிராவதமும் உடைய சுவர்க்காதிபனாதலா

னும், முன் விருத்திரன் முதலிய அசுரரை வெற்றிகொண்டமையானும் இந்திரனையும்; அவ் இந்திரனுக்குற்ற இடுக்கண் தீரச சம்பரனைவதைத்து உதவிய கருணை உடையை ஆதலின் நின்னையும் நாடிக் குறைதீர்த்துக் கொள்ளவருவோமென்று குறிப்பித்தவாறு. எனவே, கைலாயம் பாற் கடல் முதலியனபோல், நீ தலைவனாதலின் அயோத்தியும் அவற்றோடு சேர்த்தெண்ணும் தரத்ததாயிற்று எனக் குறிப்பித்தார். ஒருவரை விசேஷித்துரைக்கும்போது, அவர் சாதிதருமங் கூறிச் சிறப்பித்தல் மெய் யுவகை விளைப்பதாகலின், 'இகல்கடந்த புலவுவேலோய்' என க்ஷத்திரிய தருமம் கூறியவாறு. இன்னும் இதனானே, தான் கோரிவந்ததும் ஒரு பகைதீர்க்கும் கருத்தாலே கூறினார் என்பதும் கூறாக் கூற்றாய் விளங்கல் காண்க. 'பன்னகமும் நகுவெள்ளிப் பருப்பதமும்' என்பதற்குப் பல மலைகளையும் தனக்கு இணைசாலா என்று நகைப்பதுபோல வெண்மை யாய் விளங்கும் கயிலாயகிரி என்பாரும் உளர். 'மணிமாட அயோத்தி யென்னும் பொன்னகர்' என விசேடித்து, ஏனைய இடங்களை அவ்வாறு கூறாமையால், அயோத்தியினிடத்துத் தமது பேரபிமானம் சிறத்தல் விளக்கியவாறாயிற்று. முழுவலிக் கடவுளர்பாற் குறைமொழிந்து ஒருகால் மறுக்கவும்பெற்றுத் தலைதாழ்ந்துநிற்றலினும் நின்பால்வரின் உனது வணக்கத்தைப்பெற்று இறுமாந்து எண்ணியகுறையும் தீர்வோமாதலின் எங்கட்குப் பெருமையும் துக்கநிக்கிரகமும் நின்னால் எய்துமென்றே நாங்கள் இங்கு வருவோம், என்பதும் மற்றும் இக்கவி நயமாய் அமைந்தன, அறிக." ஸ்ரீ. அ, வரதநஞ்சையபிள்ளை, 'தமிழன்' [1917 டிஸெம்பர்,] தொகுதி 5 பகுதி 10, பக்கம் 183-84-ல் வெளியிட்டது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

செந்தமிழ்த்தீஞ்சுவை.

[கஉஉ-ம் பக்கத்தொடர்ச்சி].

இனி, நன்மொழிபுணர்த்தலாவது, செஞ்சொற்களைச் சேர்த்தல். செஞ்சொல் பொருளினிது விளங்குஞ் சொல். அஃதாவது:—உலக வழக்கினுஞ் செய்யுள்வழக்கினும் பயின்றுவருஞ் சொற்களைச் சேர்த்தல். இவ்வாறுவரும் இலக்கணச்சொல், குறிப்புச்சொற்களுமடங்கும். இவை யல்லாத வழூஉச்சொற்களையும் வழக்கில்லாத சொற்களையும் இயைபில் லாதசொற்களையும், சேர்த்தலாகாது. சிலர், 'மேனி கரிதாயிற்று' என் பதை, 'மேனி கறுத்தது' என்றும், சொல்வழங்கினுன, என்பதைச் சொற்பாலித்தான் என்றும், அமைதியாயிருங்கள் என்பதை அமரிக் கையாயிருங்கள் என்றும், செவ்விதான உச்சரிப்பு என்பதைத் தீர்க்க மான உச்சரிப்பு என்றும், முயற்சிசெய்தான் என்பதை அலுவல் செய் தான் என்றும், இவ்வாறு பல வழூஉச்சொற்களையும், சாரியைகொடுத் துச் செல்லவேண்டிய வண்டின்கால், பண்டைக்காலம் என்பவைகளை வண்டுக்கால், பண்டுக்காலம் என்றும், பண்டைநாள் என்பதைப் பண்டு நாள் என்றும். அருளுக்கு, பொருளுக்கு, சிதலுக்கு என வழங்கவேண் டிபவைகளை அருட்கு, பொருட்கு, சிதட்கு என்றும், இவ்வாறு பலவழக் கில்லாதசொற்களையும் திரைகடல், அலைகடல், கருங்கடல், செங்கனி என் பவைகளை எழிற்கடல், ஒண்கடல், மொழிகடல் ஒண்கனி என்றும், இவ் வாறு பல இயைபில்லாத அடைச்சொற்களையும் கொடுத்து உரைகளை யும் செய்யுள்களையும் இயற்றுகின்றனர். இவைகளெல்லாஞ் செந்தமிழ்த் தீஞ்சுவையைக் கெடுப்பனவேயாம். கந்தபுராணக்காரரும், மென்சொல் லும், வெளிற்றுரையும், வீண் புன்சொல்லும் கவிக் கின்பம்பயவாதன வென்பர்.

இனி, ஓசைபுடைமையாவது:—செவிக் கின்பம்பயக்கத்தக்கதாகச் செய்யுளின்கண் மாத்திரையளவை யுடைத்தாதல். சங்கச்சான்றோர்க ளும், அவர்களுக்குச்சிறிது பின்னிருந்தவர்களாகிய மற்றைச் சான்றோ ரும் ஓசைகளையளந்தே செய்யுள்களையின்பம்படச்செய்தனர் ஓசைகாரண மாகச் செய்யுள்களை நான்காகவும் வகுத்தனர். ஓசை அகவலோசை,

செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்குவகைப்படும். ஓசை குறைவுபடின், ஓசையை நிறைத்தற்கு அளபெடையுங் கொண்டனர். ஓசைகளை யளத்தற்குச் செவியே கருவியாம். ஓசை குறைவுபடுமாயின், செய்யுள்கள் செவிக்கின்பம்பயவாவென்க. இதுபற்றியே கம்பரும், "யாழ்-நறையடுத்த வசுணநன் மாச்செவிப்-பறையடுத்தது போலுமென்பாவரோ" என்றார். நச்சினார்க்கினியர்,

"அவற்றுள்-மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையிலே, மாத்திரையளவும் என்பது முற்கூறியவற்றுள் மாத்திரையைச் செவி கருவியாக உணர்ந்துகொள்ளுநிலை எனக்கூறி, "வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான கேளினி" என்னும் அளபெடைச் செய்யுளை உதாரணமாகக்காட்டுதல் காண்க. பேராசிரியரும், அச்சூத்திரவுரையிலே, மாத்திரையளவு குறுகியும் நீண்டும் வாராது சமப்படவருதல்வேண்டும் என்றும், "வாகு வாகு வாகு வாகு," என்னு மடியினைப் "பனுட்டுப் பனுட்டுப் பனுட்டுப் பனுட்டு" என நிறுத்தின் அது மாத்திரைவகையிற் சிதைவுபட்டதாமெனவும், "அம்ம வாழி கேளாய் தோழீஇ," என்றுற் பின்னர்நின்ற இருசீரும் நெடிலாதலால், இன்னுதென்றும், தோழி எனக் குறுக்கியவழி இன்னோசைத்தாமென்றும் அவ்வாறே செய்யுள்செய்ப என்றுங் கூறினர். சான்றோர்கள் செவிகருவியாக அளந்தே செய்யுளியற்றினர் எனபதற்கு,

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை"

என்னுஞ் செய்யுளே சான்றுகும். எங்ஙனமெனின், அச் செய்யுள்களை அளபெடுக்காது படித்தவிடத்தும் செய்யுளோசை குன்றுதாயினும், இன்னிசை பிறவாமைநோக்கி, அளபெடுத்துக்கூறி இன்னிசைபிறப்பித்தலன். ஆதலின், ஓசையை யளந்து செய்யுள்செய்யும் வன்மை பண்டைக்கவிஞருக்குப்போலப் பிற்றைக்கவிஞருக் கியையாதென்க.

இன்னும், இவ்வழக் கமைந்தகவிகளேயன்றி, சித்திரம், மடக்கு, சிலேடை முதலிய கவிகளும் சொல்லின்பம் பயப்பனவேயாம். திருவிளையாடற்புராணத்திலே,

"ஐயங்கொண் டணைவா ரையர் பரிகலத் தையமின்றிக்
கையம்பொன் கிளையும் பெய்வார் கருத்துநா ணன்றிக் காசு
செய்யம்பொன் மருங்கு ஞாணு மிழப்பர்வெஞ் சிலையம் பன்றிக்
கொய்யுந்தண் மலர்க்கணம்புங் கொங்கையிற் சொரியச்சோர்வார்"

எனவும்,

"மடமயி லனையா ரெங்கள் வளைகளைத் தருதி ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள் கந்தரத்துள்ள தென்றான்
றடமதிக் கொம்ப னாரெங் கலையினைத் தருதி ரென்றார்
மூடமதி மிலைந்தா னுங்கள் முகமதி யிடத்த தென்றான்"

எனவும் வருஞ் செய்யுண்முதலியனவும், கம்பராமாயணத்தில் வரும், "கைவண்ண மங்குக்கண்டேன் கால்வண்ண மிங்குக்கண்டேன்" என்பதும் "வில்லெடுக்கவுரியார்கள்" என்னும் முதலையுடைய செய்யுளில் வரும் "கல்லெடுக்கவுரியானு நின்றனன்," என்பதும் சொல்லின்பம் பயப்பனவேயாம். பாரதத்தில்வரும் "கையாலு மொருசாபங் காலாலு மொருசாபம்" என்பது மது. இன்னும் விரிப்பிற் பெருகும்.

இனிப் பொருளின்பம் பயப்பனவற்றுள், ஆழமுடைத்தாதலாவது:—ஆழ்ந்தபொருளையுடைத்தாதல் என்பது பார்க்கப்பார்க்கப் பொருளாழ்ந்து தோன்றல்; இதற்கு உதாரணமாக,

"அகர முதல வெழுத் தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"

என்னுஞ் செய்யுளை ஆராய்வாம். ஆராய்தற்கண் முன் எடுத்துக் காட்டை விளக்கிப் பின் பொருளின்ஆழத்தை விளக்குதும். கடவுள் வாழ்த்துக்கூறப்புகுந்த தேவர், முதலில் இக்குறளானே கடவுள் ஒருவர் உளர் என்பதை வலியுறுத்தினர். எதனால் வலியுறுத்தினரெனில்,— அநுமானப்பிரமாணத்தானென்பது. அநுமானப்பிரமாணமாவது ;— மறைந்துநின்றபொருளை, அதனைவிட்டுநீங்காது யாண்டு முடனாய்நிகழு மேதுவைக்கொண் டுணர்வது ; இங்கே மறைபொருள் கடவுள். அதனோடுடனிகழ்பொருள் உலகு. யாண்டு உலகு என்றொருபொருள் காணப்படுகின்றதோ, ஆண்டுக் கடவுளும் உளர் என்பது துணிபு ; யாண்டுப் புகையுண்டு ஆண்டுத் தீயுளதாதல்போல என்பது. இங்கே ஆசிரியர்

இவ்வெடுத்துக்காட்டைக் கூறாமல், எழுத்தெல்லாம் "அகர முதல" எனக் கூறிய தென்னையெனின், அதனாலும் சில ஆழ்ந்த பொருணலம்பெறுதற் கென்க என்னையெனின், இறைவனாகியமுதற்பொருள் உலகமாய் வேறாய் உடனுமாய்நின்று உலகைத் தொழிற்படுத்துமாற்றை இவ்வெடுத்துக் காட்டான் விளக்குதலும், காணப்படாத கடவுளுக்குக் காணப்பட்ட உலகத்தைக் கொண்டுணர்வதாகிய கருத லநுமானத்திற்குக் காட்சியநு மானங்கூறுதல் சிறப்பன்றாதலிற் கருதலநுமானங் கூறுதலே சிறப் பாதலுமாகிய பொருணலம் என்க. இங்கே செவி கருவியாக உணரப் படும் எழுத்துக்களைக்கொண்டு அதன் காரணமாகிய நாதம் என ஒன் றுண்டென அறிதலே கருதலளவை. அதுபோலக் கண்ணா லுணரப் படும் உலகங்கொண்டு கடவுள் ஒருவர் உளர் என்பது உணரப்படுமாத லின், அதுவே அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுவமையாதல் காண்க. இனி, இது ஆழ்ந்தபொருளவாதல் விளக்குதும். உலகம் முத்தொழிற் படுதல் இயல்பு என்னும் உலகாயதமதத்தையும், இல்லது தோன்றும் என்னும் சவுத்திராந்திகர்முதலியோர்மதத்தையும், இல்லது முள்ளது மல்லது தோன்றும் என்னும் மாத்திமிகர் முதலியோர் மதத்தையும், இல்லது முள்ளது மாயது தோன்றும் என்னும் சமணன்மதத்தையும், உலகம் நித்தமென்னும் மீமாஞ்சர்மதத்தையும், அணுவே காரணமென் னும் தார்க்கிகர்மதத்தையும், மாயையேகாரணமென்னும் சாங்கியர்மதத் தையும், பரிகரிக்கும்பொருட்டு முதற்று என்றும், தான், அவனவளது வெனும் அவயவப்பகுப்புடைமையும் முத்தொழிற்படுமாறும் தனக்கு முதற்பொருளாகிய மாயையும் முத்தொழிற்படுமாற்றிற்குக்காரணமாகிய மலமும் தன்னுள் தோன்ற உலகு என்றும், மூவராயுநின்ற ஒருவன் என்பது தோன்ற, ஆதிபகவன் என்றும், உலகை இயற்றும் கர்த்தா வாதற்கேற்ற குணங்களுடைமைதோன்றப் பகவன் என்றும், அகரமுத லிய உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்களும், பிறபாடையெழுத்துக்களும் அடங்க எழுத்தெல்லா மென்றும், எழுத்துக்கள் யாவற்றையும் அவை யாயும் தானாயும் அவையே தானாயும்நின்று இயக்குமாறு தோன்ற முதல என்றும், நாதமென்பது தோன்ற அ என ஒது அகரமென்றும் கூறப் பட்டு,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே பொடுங்கி மலத்துள தாம்
அந்த மாதி யென்மனார் புலவர்"

என்னுஞ் சிவஞானபோதச்சூத்திரப்பொருள்முழுவதையுமடக்கி இது மிகவு மாழ்ந்தபொருளதாய்நிற்றல் காண்க. அகரம் ஆகுபெயர். இங்ஙனமே ஒவ்வொருகுறளும்,

> " அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள் "

என ஔவையார்கூறியவாறு ஆழ்ந்தபொருடந்து இன்பம்பயந்துநிற்றல் அறிஞர்நோக்கி உணர்வாராக. இங்ஙனமே கச்சியப்பசிவாசாரியரும், "கல்லகங்குடைந்த" என்னுஞ்செய்யுளில், "பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டனபர், எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி யுதவு மென்றும்" என்னும் அடிகளிலே, பூத்துக் காய்த்துக் கனியுதவு மென்றதனாலே, கேவல சகல சுத்தாவத்தைகளை முறையேயுணர்த்திச் சித்தாந்தக்கருத்துமுழுவதையும பொதிந்துவைத்திருத்தலும் அறிஞர் நோக்கியுணரத்தக்கது. கம்பரும்,

> " பூவிலோன புதல்வன் மைந்தன் புதல்விமுப் புரங்கள் செற்ற
> சேவலோன் றுணைவ னான செங்கையோன றங்கை திக்கின
> மாவெலாந்தொலைத்து வெள்ளிமலையெடுத்துலக மூன்றுங்
> காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள் "

என்னுஞ்செய்யுளிலே, புதல்வி என்றதனாற் குலமும், தங்கை என்றதனாற் செல்வமும், பின்னையென்றதனால் துணைவலியும், காமவல்லி என்றதனால் எழிலும், கன்னி என்றதனால் விவாகஞ்செய்யப்படாமையும், முதலிய பலபொருள்கள் ஆழ்ந்துகிடக்கவைத்திருத்தல் காண்க; இங்ஙனமே கம்பன்கவி ஒவ்வொன்றும் ஆழ்ந்தபொருளவாய் இன்பம்பயப்பனவாகும்.

இனி உலகமலையாமையாவது:-உயர்ந்தோர்வழக்கொடு மாறுபடாமை; மாறுபடுதலாவது சான்றோர்கள் சொற்களையும் பொருள்களையும் எவ்வாறுகொண்டு வழங்கினரோ அவ்வாறே கொண்டுவழங்காது மாறுபட வழங்கல்;உதாரணமாக, மேகம்போலுங்கூந்தல் என்பதைக் காகம்போலுங் கூந்தல் என்றும் யானைக்கோடுபோலுந் தனமென்பதை எருத்துக்கோடு போலுந் தன மென்றும், குதிரைமேய்ப்பானை இடையனென்றும், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றும் வழங்கல் முதலாயின. சிலர்

> " பழையன கழிதலும் புதியன புகுதலும்,
> வழுவல கால வகையி னானே "

என்னும் ஒரு புறனடைச்சூத்திரங்கொண்டு புதியனபுகுத்தி ஆன்றோர் வழக்கொடு முரணக்கொள்வர். அவ்வாறுகொள்வது பெரியதோர் வழுவாம். என்னை, புதியனபுகுத்துங்காலும் ஆன்றோர்வழக்கொடு முரணலாகாதாகலின்.

இனி, விழுமியதுபயத்தலாவது:—சிறந்தபொருளைப் பயத்தல்; என்றது வைக்கப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றும் சிறந்தபொருளவாதல். சிறந்தபொருள்தராதன இன்பம் பயவா. அவை கற்றார்புகழுங்கவிஞன் என்பதற்கு மாந்தர்புகழுங் கவிஞன் என்றலும், சக்கரவர்த்தியை மன்னர்மன்னன் என்பதற்குப்பதிலாய் நிலமன்னன என்றலும் போல்வன. திருவள்ளுவர்கூறிய ஆதிபகவன் என்பதும், வாலறிவன், என்பதும்,"வேண்டுதல்வேண்டாமையிலான்"என்பதும் "யாண்டும் இடும்பையில" என்பதும், கம்பர்கூறிய,

"ஆசலம்புரி யைம்பொறி வாளியும்,
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின புறஞ்செலா"

என்பதும், புறநானூற்றில்வரும்

"மண்டிணிந்தநிலனும்
நிலனேந்தியவிசும்பும்
விசும்புதைவருவளியும்
வளித்தலையதீயும்
தீமுரணியநீருமென்றாங்
கைம்பெரும்பூதத்தியற்கைபோலப்
போற்றார்ப்பொறுத்தலும்"

என்னுஞ் செய்யுளடிகளும் மிக விழுமிய பொருள்பயந்து இன்பம்பயத்தல் காண்க. இச்செய்யுள்களில்வரும் அடைமொழிகள் யாவும் மிகவும் விழுமியபொருள்களைப் பயந்துநிற்றலின் இவற்றையே காட்டினும். அவற்றை ஓர்ந்துணர்க. விரிப்பிற் பெருகும். தொல்காப்பியர் இதனை நோக்கு என்பர். அதனை,

"மாத்திரை முதலா வடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"

என்னுஞ் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் உரைத்த உரைநோக்கி யுணர்ந்துகொள்க.

இனி, விளங்குதாரணத்ததாதலாவது:—தான்சொல்லும் பொருளை வலியுறுத்துமாறு எடுத்துக்காட்டும் உதாரணம் எவர்க்குந் தெரிந்ததாக இருத்தல். அது "அகரமுதலஎழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு"

எனவும், "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா - னிந்திரனே சாலுங் கரி," எனவும் வருங் குறள்களினும்,

"அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னூலுணர்ந் தாரு முனிவரோ"

என்னுஞ் செய்யுளினும் உள்ள எடுத்துக்காட்டுக்களை நோக்கியுணர்க.

இங்ஙனமே நன்னூலார்கூறிய பத்தழகினுள்ளும் நூற்குரிய இலக்கணமாகிய முறையின்வைப்பொன்றொழிய ஏனைய சொற்சுவை பொருட்சுவைகளைப் பயப்பனவாதல், அவற்றிற்குக் கூறிய உதாரணங்களை நோக்கியுணர்ந்துகொள்க. இவ்வழகுகளமைய இயற்றும் உரைகளும் செய்யுள்களுமே செந்தமிழ்க்குத் தீஞ்சுவைபயப்பனவாகும். உரைநடைப் பயிற்சி அக்காலத் தின்று எனினும், தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப"

எனக் கூறியவற்றுள், பாட்டிடைவைத்த குறிப்பினானும், பாவின் றெழுந்த கிளவியானும், வழங்கும் உரைநடைகளானே உரைநடைகளின் போக்கு நா முணரக்கிடக்கின்றது. அவற்றுள், பாவின்றெழுந்தகிளவிகளுள், களவியலுரை சேனாவரையருரை பரிமேலழகருரை முதலியன மிகவுந் தீஞ்சுவைபயப்பனவாகும். களவியலுரையுட் சில வாக்கியத் தொடரை அதன் போக்குணர்தற்காக இங்கே காட்டுதும்.

அவை, "விசும்பு துடைத்துப் பசும்பொன்பூத்து, வண்டு துவைப்பத் தண்டேன்றுளிப்பதோர் வெறியுறுநறுமலர் வேங்கை கண்டாள், கண்டு பெரியதோர்காதல்களிகூர்ந்து தன் செம்மலர்ச்சீறடிமேற் சிலம்பு கிடந்துசிலம்புபுடைப்ப அம்மலரணிக்கொம்பர் நடைகற்பதென நடந்து சென்று, நறைவிரிவேங்கைநாண்மலர்கொய்தாள்" என்பன.

இவ்வாறு எதுகைத்தொடை, மோனைத்தொடைமுதலியனவமையவும், பத்தழகமைவாய்ப்பவும் உரையியற்றுவோர் இக்காலத்து மிக அரியர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய வசனநூல்கள் பத்தழகும் வாய்ந்து செந்தமிழ்க்கு மிகவுந் தீஞ்சுவைபயப்பனவேயாம். செய்யுளியற்றியவர்களுள், சங்கச்சான்றோர்களும் சங்கத்தாங்கேறிய நூலாசிரியர்களும், கம்பர், கல்லாடர், கச்சியப்பசிவாசாரியர், சேக்கிழார்

முதலியோரும் மிகச்சிறந்தவர்கள். சங்கச்சான்றோர்கள்கவிகள்யாவும் பொருள்களின இயற்கைகளைக்கூறுவதில் மிகவு மின்பம்பயப்பன: ஏனையோர்கவி அதனோடு கற்பனைகளாலும் மிகவும் இன்பம் பயப்பன வாகும். கற்பனையாலின்பம்பயப்பதற்குக் கல்லாடர்கவியுட் சிலகாட்டி முடிக்குதும்.

> "மூலையென விரண்டு மூரட்குவடு மரீஇக்
> குழற்காடு சுமந்த யானைமகட் புணர்ந்தோய்"

என்னு மடிகளைநோக்குமிடத்துக் குவடுமருவலும் காடுசுமத்தலும் யானைக்கு முண்மையின் அவ்வியல்புதோன்ற, "மூலையென விரண்டு மூரட்குவடுமரீஇக்—குழற்காடுசுமந்தயானைமக"ளென வைத்த வைப்பும்,

> "செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
> பைங்கொடி வள்ளி படர்ந்த புயமலையோய்"

என்னுமடிகளில் வள்ளிக்கொடி குறவர்களால்வளர்க்கப்பட்டு, மலைகளிற் படர்வனவாதலின, அவ்வியல்புதோன்றச் "செங்கட்குறவர் கருங்காட்டு வளர்த்த, பைங்கொடிய வள்ளிபடர்ந்த புயமலை"என்று வைத்தவைப்பும் நோக்குமிடத்துச் செந்தமிழ்த்தீஞ்சுவைகளை உணரும்வன்மையுடையார்க்கு அவருள்ளத்தை றுநீங்காது கிடந்து இன்பம்பயவாதொழியா.

இவ்வாறு, கற்பனைகளாலும், இயற்கையமைப்பாலும் தீஞ்சுவை பயப்பன, கல்லாடர்கவியுட் பலப்பல. அவற்றையெல்லாம் அறிஞர் நோக்கியுணர்வாராக. இங்ஙனம் கவியியற்றவல்லோரும் இக்காலத்து மிக அரியர். அதன்காரணம் பிறவுளவேனும் செந்தமிழைப் பரிபாலிப்பாரும் சன்மானிப்பாரு மின்மையே முதலாகவுள்ளது. ஆகையால் அதனையுணர்ந்து செந்தமிழைப் பரிபாலித்தும் சன்மானித்தும் மதுரைத்தமிழ்ச்சங்கம் நீடூழி வாழ்வதாக.

இதுகாறுங்கூறியவாற்றானே செந்தமிழாவது சங்கப்புலவர்களாலாராய்ந்து செம்மைசெய்யப்பட்டதென்பதூஉம், செந்தமிழ்நாடு பாண்டிநாடேயென்பதூஉம், செந்தமிழ்க்குத் தீஞ்சுவை இயற்கை என்பதூஉம், சுவை சொற்சுவை, பொருட்சுவை என இரண்டுவகைப்படு மென்பதூஉம், நன்னூலார்கூறிய பத்தழகினுள்ளே சுருங்கச்சொல்லல் முதலிய ஐந்தும் சொற்சுவை பயப்பனவென்பதூஉம், ஏனைய பொருட்சுவை பயப்பன வென்பதூஉம், செந்தமிழ்த் தீஞ்சுவைபயப்ப உரையுஞ்செய்யுளு மியற்றும் வன்மை அக்காலத்தார்க்கன்றி இக்காலத்தார்க்கரிதென்பதூஉம், அதன்காரணம் செந்தமிழைப்பரிபாலிப்பாரும் சன்மானிப்பாரும் இல்லாமையேயென்பதூஉம், நம் சங்கத்தார் இன்னும் அவற்றின் அதிகம் முயல்வார்கள் என்பதூஉம் உணரக்கிடத்தல்காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர், புன்னாலைக்கட்டுவன்.

சூரியசந்திரோற்பத்தி.

(௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

[படலத் துட்பிரிவாகிய அதிகாரப்பெயரைத் தலைப்பெயராகத் தந் தனம்; நூற்பெயரும் படலவகையும் முகவுரைக்கண்ணே தந்துரைக்கப் பட்டனவாகலின். இனிமேல்வரும் "மேற்றிசைச்செல்வப்" பொருளுரை வகைக்கும் இஃதொக்கும்.]

7. புதனுலகம் (Mercury), சுக்கிரனுலகம் (Venus), பூவுலகம் (Earth), செவ்வாயுலகம் (Mars), வியாழவுலகம் (Jupiter), சனி யுலகம் (Saturn), குபேரனுலகம் (Uranus), வருணனுலகம் (Neptune), ஆகிய கிரகங்களும், உபக்ரகங்களாகிய சந்திரர்களும் இவை யனைத்தினுக்கும் ஆதாரமாய் நடுவினின்ற சூரியனும் பலவூழிக்காலங் களுக்கு முன்பாக ஒருதனிபழற்பிழம்பாகவிருந்தனவாமெனவும், பின் னர்ப் பிரிவுண்டு தம்மிற்றும் (பம்பரம்போலச்) சுழலுவதோடு, கிரகங்கள் சூரியனையும் உபக்ரகங்கள் முதற்கிரகங்களையும் சுற்றிவருகின்றனவா மெனவுங் கண்டாம். இனி இவற்றின் இடைவெளித்தூரவெல்லை,சுழற்சிக் காலவெல்லை, சுற்றோட்டக்கால எல்லை, பரிமாணம் என்னும் இவற்றைத் தந்து அப்பாற்செல்வாம். பூவுலகத்தின் சுழற்சிக்காலவெல்லையாகிய நாளை மானமாகக்கொண்டு ஏனைய காலவெல்லைகளைக் கணக்கிடுதல் நன்று. தூரவெல்லையைக் கணக்கிடுவதற்குச் சந்திரனுக்கும் பூவுலகுக்கும் இடை யில் ஏற்படுகிற இடைவெளித்தூரமாகிய இரண்டிலக்ஷத்து நாற்பத் தெண்ணாயிரம் மைல் தூரத்தை அளவுகோலாகக் கொண்டு அதனைச் சந்திரபதம்எனப் பெயரிட்டு வழங்குவாம். [சந்திரபூவுலக இடைவெளிப் பேரெல்லை இரண்டிலக்ஷத்து ஐம்பத்து மூவாயிரம்; சிற்றெல்லை இரண்டிலக்ஷத்திருபத்தீராயிரம் மைலாகும்]: சூரியனுக்கும் பூவுல குக்கும் இடைவெளித்தூரவெல்லை முந்நூற்றெழுபத்தைந்து சந்திர பதமாகும். ஒன்பதுகோடியேழுப்பதிலக்ஷம் மைல் என்பதனினும் பார்க்க முந்நூற்றெழுபத்தைந்து சந்திரபதம்என்பது வாய்ப்புடைத்து; பேரிலக்கங்களை உள்ளம் நன்கு பற்றிக்கொள்ளமாட்டாதாதலின்.

8. இது விஞ்ஞானநூலாதலின், தூரவெல்லை காலவெல்லை முதலியவற்றைக் கணித்தறிந்த தெவ்வாறெனக்காட்டுதல்வேண்டும். இதனை முற்றாக ஆராய்வதற்கு நுண்ணியற் கணிதமுறைகள் பல வேண்டப்படுவன; அத்தகைய முறைகளைக்கூறும் நூல்கள் தமிழ்மொழியிலில்லாதிருக்கின்றமையால் இயன்றவரை சுருக்கமாகக் காட்டுவாம். வானமண்டலத்தில் மேற்சொல்லப்பட்ட கிரகங்களின் சலனங்களைக் கண்கூடாகவாவது தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலமாகவாவது பார்த்து மதிப்பிட்டுச் சுற்றோட்டக் காலவெல்லையைக் கண்டறியலாகும். இங்ஙனங் கண்டறிந்த சுற்றோட்டக்காலவெல்லைகளாவன :—புதனுலகம் 88 நாள், சுக்கிரனுலகம் 224½ நாள், பூவுலகம் 365½ நாள், செவ்வாயுலகம் 780 நாள், வியாழவுலகம் 4333 நாள் (ஏறக்குறைய 12 வருஷம்), சனியுலகம் 10759 நாள் (ஏறக்குறைய 29½ வருஷம்), குபேரனுலகம் 30687 நாள் (ஏறக்குறைய 84 வருஷம்), வருணனுலகம் 60181 நாள் (ஏறக்குறைய 165 வருஷம்). சுற்றோட்டவட்டத்தின்பாகத்துக்கு இத்தனைநாட் செல்லுகிறதென்பதைக் கண்கூடாகவாவது தூரதிருஷ்டிக்கண்ணாடிமூலமாகவாவது நேரிற்கண்டு முழுவட்டத்துக்கு இத்தனைநாளாகும் என்பதைக் கணித்தறிவது.

9. இடைவெளித்தூரவெல்லையை யறிவதற்குக் கணிதநூலிற் கண்டமுடிபு வருமாறு:—சுற்றோட்டதினத்தை வர்க்கிக்க; (வர்க்கித்தலாவது ஒரு எண்ணைவைத்து அதனையேகொண்டு பெருக்கித் தொகை காண்பது. உதாரணமாக ஏழினது வர்க்கம் நாற்பத்தொன்பது). அங்ஙனம் வர்க்கித்துக் கண்டதொகையினது கனமூலத்தைக் கண்டெழுதுக; (கனங்காணுதலாவது ஒருஎண்ணைவைத்து அதனையே கொண்டு பெருக்கிவந்ததொகையை மீண்டுமொருமுறை பெருக்கிக்காண்பது; உதாரணமாக இரண்டின்கனம் எட்டு, மூன்றின்கனம்இருபத்தேழு. இனி இருபத்தேழின்கனமூலம் மூன்று; எட்டின்கனமூலம் இரண்டு என்று அறிவது. எந்த எண்ணுக்குங் கனமூலங் காணுகிறமுறையைக் கணிதநூல்களிற் காண்க). இங்ஙனங்கண்ட கனமூலங்களை இடைவெளியெண் என ஒருபடியாக எழுதுக. சுக்கிரசூரியசமாகமகாலத்திற் குறிப்பிட்ட சில முடிபுகளைக்கொண்டு சுக்கிர சூரிய இடைவெளித்தூரம் ஆறுகோடியே எழுபதிலக்ஷம்மைல் அதாவது இருநூற்றெழுபது சந்திரபதம் எனக்

கணிக்கப்பட்டது. இதனைப் புதனுக்குரிய இடைவெளியெண்ணினாற் பெருக்கிச் சுக்கிரனது இடைவெளியெண்ணினாற் பிரிக்கவருவது புதனுடையஇடைவெளித்தூரமாகும். அவ்வண்ணமே சுக்கிரனிடைவெளித் தூரத்தைச் செவ்வாயினது இடைவெளியெண்ணினாற்பெருக்கிச் சுக்கிரனிடைவெளி யெண்ணினாற் பிரிக்கவருவது செவ்வாயினது இடைவெளித்தூரம்; ஏனையவற்றுக்கும் இவ்வாறு தும். (செவ்வாய், வியாழத்துக்கு வேறுசில நுண்ணியற் கணிதக்கிரியைகளுஞ் செய்தல்வேண்டும்) இங்ஙனம் கணித்துப்பெற்ற இடைவெளித்தூரவெல்லைகள், அதாவது சூரியனுக்கும் குறிக்கப்பட்ட கிரகங்களுக்கும் இடையேயுள்ள தூரவெல்லைகளாவன :—புதன் 145 சந்திரபதம், சுக்கிரன் 270 ச. ப., பூவுலகம் 375 ச.ப., செவ்வாய் 573 ச.பு., வியாழம் 3577 ச. ப., குபேரனுலகு 7098 ச. ப., வருணனுலகு 11274 ச. ப. சந்திரபதத்தை வைத்து நாலிற்பெருக்கி மூன்றில்வகுக்கவருவது ஒளியெண்எனப்படும். இவ்வெண் சூரியனுடைய ஒளி குறிக்கப்பட்ட கிரகத்தை சென்று சேர்வதற்கு இத்தனை "செகன்ட்" ஆகும் என்பதனைக் காட்டுவது. பூவுலக ஒளியெண் 500, ஆதலால், சூரியனுடைய ஒளி பூவுலகிற் சென்றுசேர 500 "செக்கன்ட்" கழியும் என்பது. இத்தொகையை 24-ல் வகுத்து விநாடியாக்கலாம். ஒளியினது வேகம் ஒரு செக்கண்டுக்கு ஒரு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல் ஆதலால் ஒளியெண்ணை வைத்து ஒரு லக்ஷத்துஎண்பத்தாறுயிரத்தாற் பெருக்கி இடைவெளித் தூரம் இத்தனை மைல் என்று சொல்லுதல் கூடும்.

10. சுழற்சிக்காலவெல்லை தூரதிருஷ்டிக்கண்ணுடியால் நேரிற் கண்டறிவது; புதனுடைய சுழற்சிக்காலவெல்லை அளந்தறியப்படவில்லை. இது பூவுலக சு. கா. எல்லையினின்றும் வேறுபட்டதன்றென ஊகிக்க இடமுண்டு. சுக்கிரன் சு. கா. எ. 23 மணி. 21 மினிற். செவ்வாய் சு. கா. எ. 24 மணி, 37 மினிற் 23 செக்கன்ட். வியாழவுலகின் சு.கா.எ. 9 மணி 55 மினிற், சனியுலகின் சு. கா. எ. 10 மணி 14 மினிற் 24 செக்கன்ட். குபேரனுலகு வருணனுலகின் சுழற்சிக்காலவெல்லை அளந்தறியப்படவில்லை. கிரகங்களும் உபக்ரகங்களும் சூரியனும் உடுக்கணங்களும் கோளவடிவின. கோளத்தினது விட்டத்தைபறியின் அதன் மேற்பரப்பு, கனம் முதலியவற்றைக் கணிதநூன்முறைப்படிக் கண்டறிதல்கூடும், புதனுலகவிட்டம் 2990 மைல், சுக்கிரனுலகவிட்டம்

7600 மைல், பூவுலகவிட்டம் 7900 மைல், செவ்வாயுலகவிட்டம் 4200 மைல், வியாழவுலகவிட்டம் 87000 மைல், சனியுலகவிட்டம் 73000 மைல், குபேரனுலகவிட்டம் 32000 மைல், வருணனுலகவிட்டம் 35000 மைல், பூவுலகுக்கு உபக்ரகமாகிய சந்திரன் ஒன்று, செவ்வாய்க்குச் சந்திரர் இரண்டு, வியாழனுக்கு நான்கு, சனிக்கு எட்டு, குபேரனுலகுக்கு இரண்டு, வருணனுலகுக்கு ஒன்று. நமது சந்திரனது விட்டஅளவு 2160 மைல், இவை யெல்லாம் தூரதிருஷ்டிக்கண்ணாடியால் நேரில் அளந்து கண்டமுடிபுகள்.

11. கிரகங்கள் சிலவற்றுள் தாவரவருக்கங்களும் விலங்கினங்களும் மக்களும் வசித்தல்கூடுமென வானநூல்வல்லார் ஊகித்துரைக்கிறார்கள். நாம் வசிக்கும் பூவுலகும் எஞ்சிய கிரகங்களைப்போன்றதொருகிரகமேயாதலினால், இங்குள்ளபொருட்கள் பல ஏனையகிரகங்களிலும் உள என்பதற்கு ஐயப்பாடில்லை. செவ்வாயுலகிலுள்ளாரோடு வசனிப்பதற்குவேண்டிய கருவிகள் சிலவற்றை மேற்றிசையறிஞர்கள் மிகமுயன்று அமைத்துவருகிறார்களாம். தோற்றமுறையிற் செவ்வாய் பூவுலகத்துக்கு முன்பு உண்டாயது. நமக்கு மிகவும் அணித்தாயுள்ள சுக்கிரனுலகம் அளவு முதலியவற்றாற் பெரிதும் பூவுலகத்தை நிகர்த்ததாகும். செவ்வாயுலகு சுக்கிரனுலகிலிருப்பவருக்கு நமது பூவுலகம் காட்சிக்கினிய அழகிய சிறிய நக்ஷத்திரமாகத்தோன்றும். புதனுலகு சூரியனுக்கு மிகவும் அணித்தாயிருத்தலினாலே ஆங்குள்ள சீவர்கள் மிகுந்த வெப்பநிலையைத் தாங்கத்தக்கவர்களாயிருத்தல்வேண்டும்.

12. உலகுகளனைத்தும் ஐம்பெரும்பூதக்கலப்பினாலமைந்தன வென முன்னமே சொன்னோம். இனி மண், நீர், தீ, வளியாகிய நான்கு பூதங்களும் வானினின்று தோற்றியவாமெனவும், ஊழியிறுதியில் இவை யாவும் நிலனாய் ஒடுங்கி, அதன்பின் பசும்பொனுலகமும் மண்ணும் பாழ்பட்ட நிலையில் வானாகி ஒடுங்குவனவாமெனவும் விஞ்ஞானநூன் முறைப்படியறிந்தனம்; மேல் எடுத்துக்காட்டிய பரிபாடல் விசும்பு கெட்டநிலைமையும் உண்டென்று கூறுகின்றதே; இக்கூற்றுக்கு மேலைத்தேசநூலாசிரியர்களது ஆராய்ச்சியின்பாலவாகிய ஆதாரங்கள் உளவோ வெனவிசாரிப்பின் உள என்போம்; ஆயினும், அம்முடிபுகளை முறைப்படி தாபித்துக்காட்டுவதற்கு நுண்ணியற் கணிதமுறைகள் பல வேண்டப்

படுவதாதலால், சிலஆதாரங்களைக்காட்டி ஒருவகையாக முடிபுசெய்வாம். பதார்த்தவியல்பினை ஆராய்ந்த மேற்றிசையாசிரியர்கள் சடப்பொருளனைத்தும் அணுக்களாலமைந்தனவென முடிபுசெய்தார்கள். நீர் என்னும் பொருள் தனிப்பொருளன்று; அணி (Hydrogen), மதி (Oxygen) என்னும் இருவகையணுக்களாலமைந்ததாமென்றும், மரம், சீனி, மா (starch) என்னும் இவை கரி (carbon), அணி, மதி என்னும் மூவகை அணுக்கள் வேறு வேறு அளவிற்றாகக்கூடிய கூட்டப் பொருட்களாமெனவும், பொன், வெள்ளி போன்றன தனிப்பொருட்களாமெனவும் இரசாயன முறைப்படி ஆராய்ந்து கண்டார்கள். இங்ஙனங் கண்டறிந்த தனிப்பொருள்கள் எண்பதிற்றுச்சில்வானமாம். பிரபஞ்சத்திலுள்ள பொருள்களனைத்தும் இந்த எண்பதிற்றுச்சில்வானத் தனிப்பொருள்களுள் ஒன்றோ பலவோ கூடியாயினவெனவும், இப்பொருள்கள் பரமாணுக்களால் (atoms) அமைந்தனவாமெனவும், ஒருபொருளின் பரமாணு மற்றொருபொருளின் பரமாணு ஆகாதெனவும் சில ஆண்டுகளின்முன் மேற்றிசையறிஞர்கள், தீர்ப்பிட்டார்கள். பின்னாளிற் சோதி, (றேடியம், Radium) என்னும் உலோகப்பொருளை யாராய்ந்து கண்ட முடிபினாலே பரமாணுக்கள் அனைத்தும் தம்மினும் நுண்ணியவாய மின்னுரு (Electrous) க்களால் அமைந்தனவாமென நிச்சயித்தார்கள்; நிச்சயிக்கவே ஒருவகைப் பரமாணு மற்றொருவகைப் பரமாணு ஆதல்கூடும் எனவும், பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப்பொருளும் மின்னுருக்களா லாயினவெனவும் புதிதாக ஒரு உண்மை புலப்பட்டது. அங்ஙனம் புலப்பட்டபின் விஞ்ஞானநூலாசிரியர்களும் கணிதநூலாசிரியர்களும் ஒருங்குசேர்ந்து மின்னுருக்களின் இயல்பு பரிமாணம் முதலியவற்றை நுண்ணியமுறைகளா லாராய்ந்தார்கள்; அவ் வாராய்ச்சியின் பயனாக மின்னுருக்கள் நிறையுடைய சடப்பொருள்களன்று எனவும், அவை சுழற்சிவேகத்தினால் நிறையுடையனவாகத் தோற்றுகின்றன எனவும், அகிலலோகங்களினும் பரந்திருக்கிற வான் (Ether) என்னும் பூதத்தில் நீர்ச்சுழிபோன்று நிலைபெற்றிருக்கும் இயல்பின இம் மின்னுருக்கள் எனவுங் கண்டார்கள். காணவே பொருள் எனப்படுவது வான் (Ether) ஒன்றுமாத்திரமேயெனவும், ஏனைய அதனது பரிணாமத்தோற்றங்களேயாமெனவும் புலப்பட்டது. அதன்மேற் கணித முறையினால் வானின் இயல்பை யாராய்ந்தார்கள். விஞ்ஞானநூலிலும்

கணிதநூலினும் வல்லவரும் உலகெங்கும்பரம்பிய இசைமலிந்த புலமையாளருமாகிய ஜெர்மனிதேசத்தாசிரியர் எயின்ஸ்டயின் (Einstein) என்பவர் நுண்ணிய கணிதமுறையாக ஆராய்ந்து கண்ட முடிபினால் வான் (Ether) வெறுவெளியின் (space) இயல்பினதாமெனவும், காண்போர் உள்ளத்தே நிலவுவதன்றித் தனக்கென ஒரு பொருட்டன்மையில்லாததாமெனவும் நிறுவினர். (இவ்வாசிரியர் தாபித்த "The Principle of Relativity" என்னும் விஷயத்தைப்பற்றி வேதாந்த கேசரி யென்னும் ஆங்கிலப்பத்திரிகையில் நாம் எழுதிய வியாசத்தை நோக்குக) இங்ஙனம் நிறுவப்படவே புறப்பூதங்கள் அனைத்தும் பொய்த்தோற்றமாமென்னும் உண்மை விஞ்ஞானநூற்படி நிறுவப்பட்டது.

13. இங்ஙனம் நிறுவப்பட்ட முடிபினை ஆதாரமாகக்கொண்டு மேற்றிசை விஞ்ஞானசாஸ்திரிகளுட் சிலர் சூனியவாதம்பேசத் தலைப்பட்டார்கள். இன்னர் சிறிது ஆழ்ந்து சிந்திப்பாராயின் புறப்பொருளை அநித்தியப்பொருளென்றுகண்ட தாம் அவற்றின் வேறாய நித்தியப் பொருளாமெனவும் தூலபூதங்களுக்குக்காரணமாய சூட்சுமபூதங்கள் தமது ஞானேந்திரியங்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமேயாம் என்பதையும் அறிந்துகொள்வார். பஞ்சபூதங்களைக்குறிக்கிற சொற்கள் அதிதூலம், தூலம், சூட்சுமம் ஆகிய மூன்று நிலையில் மூவேறு பொருளினைப் பெறுவன. மண் என்பது மணல் முதலிய பொருள்களையும் (Earth), கடினத்தன்மையையும் (solid), நாற்றமூலத்தையும் (smell-potential) குறிப்பதாகும். நீர் முதலிய பொருள்களும் (Water), திரவத்தன்மையும், சுவை மூலமும் (Taste-potential), நீரெனப்படுவ. நெருப்புமுதலிய பொருள்களும் (Fire), திரவத்தன்மைக்கும் வாயுத்தன்மைக்கும் இடையே நின்ற ஆவித்தன்மையும் (Vapour), ஒளிமூலமும் (Sight-potential) தீயெனப்படுவ. காற்றுமுதலிய பொருள்களும் (Air), வாயுத்தன்மையும் (Gas), பரிசமூலமும் (Touch-potential) வளியெனப்படுவ. மின்னுருக்களும் (Electron), அகலிடமும் (Ether. space), ஓசைமூலமும் (sound-potential), வான் எனப்படுவ. இங்ஙனம் ஆராயும்வழித் தோற்றப் பொருள்களனைத்தும் மகாஆகாசமாகிய பூதாகாசத்திலிருந்து தோற்றிய

மெனவும், பூதாகாசம் மனத்தின் சார்பாகிய சித்தாகாசத்திலிருந்து தோற்றியதெனவு மறியக்கிடக்கின்றது. சித்தாகாசத்துக்கு மூலமாகிய சிதாகாசம் ஒன்றுஉண்டெனச் சாந்தோக்கியம் முதலிய சுருதிவாயிலாக அறிவோம். ஈண்டைக் காராய்ச்சியின்மையின் விரிக்காது விடுகின்றோம், ஆயினும் ஒரு குறிப்புமாத்திரஞ் சொல்லிமுடிப்பாம்.

14. திருவுடையாளொருநங்கையைப்பார்த்து என்பும் இறைச்சியும் உதிரமுந் தோலும் என்னும் இவற்றாலமைந்தது இவ்வுருவம் என்று சொல்வது பூரணவியல்புகூறிய முடிபுரையாகாது. அங்ஙனமே, மணந்தார்க்கு இன்பினையுந் தணந்தார்க்குத் துன்பினையுந் தரவல்லதாய் நீல ஆகாயத்தில் அழகுபொருந்திய வெள்ளி வெண்கலசம்போலத் தோற்றிக் காடுங்கரையும் நீரும்நிலனும் வனப்புமிக்கொளிர மனக்கு வப்பளிக்குந் தண்மதியை மண்ணுங்கல்லும்பொருந்தி விண்ணின்று சுழலும் ஒளியிலாக் கோளமெனவும், குமுதங்குவியவும் கமலம்மலரவுங் குணதிசையுதித்துக் கதிரொளிபரப்பிக் குவியிருளகற்றும் பரிதியங் கடவுளை உணர்விலா அக்கினிக்கோளமெனவும் விஞ்ஞானவாதிகள் உரைத்தாங்கு உரைத்தல் பூரணவியல்புகூறிய முடிபுரையாகாது. மகாகாசத்திற் பரிதி, மதி, குரு, புகர், சனி, பூமகன், மதிமகன் என்னுங் கோள்களுக்கும் நமது உடலத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு, மேலேகாட்டியவாறுபோல இவையும் பூவுலகமும் ஒரு பிழம்பாயிருந்து பிரிவுண்டனவாதலின். இனிச் சித்தாகாசத்தில் எமது உள்ளங்களுக்குங் கோள்களின். தன்மைகளுக்குந் தொடர்புண்டு; எம்முயிர்க்குயிராகிய இறைவனே யாண்டும் பரந்திருக்கிறானாதலால், சிதாகாசத்தினுந் தொடர்புண்டு என்பது. சூரிய சந்திரோற்பத்தியைச் சுருக்கமாகக்கூறிமுடித்தாம்; மேல்வரும் அதிகாரத்தில் மலைகடலுற்பத்திகூறுவாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை.

பிரபோதசைதந்யர்.

புத்தக மதிப்புரை.

I. பிரபந்தத்திரட்டு:—இது, திருவருட்பிரகாசவள்ளலார் என்னும் சிதம்பரம் ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகள்மீது ச. மு. கந்தசாமிப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இதில், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக்குறிப்புடன் சற்குருவெண்பாவந்தாதிமுதலிய சில பிரபந்தங்களடங்கியுள்ளன. இப்புத்தகத்தால் வள்ளலார்தம் அற்புத செயல்களும் ஞானசீலாதிகளும் நன்குவிளங்குவதோடு அவரிடத்து ஆக்கியோர்க்குள்ள பேரன்புடைமையும் நன்குபுலப்படும். இப்புத்தகம் அச்சிடுவதற்குப் பொருளுதவிபுரிந்த இராமசந்திரபுரம் ஸ்ரீமான் தி. நா. முத்தையாசெட்டியாரவர்களது வித்வதபிமானம் பாராட்டத் தக்கது. இதன் விலை ரூபா இரண்டு. இப்புத்தகம் விலைக்குக் கிடைக்கு மிடங்கள்:—(1) காரணப்பட்டு ஸ்ரீமத் ச. மு. கந்தசாமிப்பிள்ளையவர்கள். நல்லாத்தூர்ப்போஸ்டு, புதுச்சேரி மார்க்கம். (2) S. P. ராஜாராம் ஸன் ஆப் இந்தியா பிரஸ், சூளை, வேப்பேரி போஸ்டு, சென்னை என்பன.

II. தோத்திரக்கோவை:—(முதற்பாகம்) இது, மட்டுநகர்வித்துவான் ஸ்ரீமத் ச. பூபாலபிள்ளையவர்களியற்றிய கணேசர் கலிவெண்பா முதலிய பத்துப்பிரபந்தங்கள் அடங்கியது. இதனால் ஆக்கியோரது தெய்வபக்தியும் கல்வித்திறனும் நன்குவிளங்கும். இவர்கள்செய்த பிரபந்தங்கள் இன்னுஞ் சிலஉள. இவர்கள் தமிழ்ச்சுவைநுகர்விற் பொழுது போக்குதல் பாராட்டத்தக்கது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், 20, காரணேசுவரர்கோயில்வீதி, மயிலாப்பூர், சென்னை என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

III. ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் பிள்ளைத்தமிழ் — இது திருவோத்தூர் ஸ்ரீமத். திருஞானசம்பந்தமுதலியாரால் முன்னைந்து பருவமும், ஆலங்காடு ஸ்ரீமத். வை. செல்லையாசெட்டியாரால் பின்னைந்து பருவமும் நல்ல பாடல்களாகப் பாடப்பெற்றிருக்கிறது.

VI. ஞானமிர்தக்கட்டளை.—இது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும் வெளியிடப்பெற்றது. இதிற் சைவசித்தாந்த தத்துவங்களும் ஸம்பிரதாய முடிபுகளும் அறிய விரும்புவோர் எளிதிற் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையி லெழுதிப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதன்விலை அணு 4. வேண்டுவோர் ஷை கழகத்துக் கெழுதிப் பெறலாம்.